# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் ஏப்ரல் 21உ [ந. 245


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXLV.

## ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் மரணம்.

### புதுக்கோட்டை சட்ட சபையை ஒத்திவைக்கவேண்டுமென்று பிரேரேபித்தபொழுது.

1945-ம் ஏப்ரல் 16-ம் தேதியன்று புதுக்கோட்டை ஸ்ரீ-திவான் ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், C. I. E., அவர்கள் ஆற்றிய

### சொற்பொழிவு.

"அவர் கியாதி பெற்ற நிர்வாகி, ராஜதந்திரி, ஜனசமூகத்தின் ஆப்த நண்பர்.

"நாஸிகளுக்கு வெற்றி ஏற்பட்டால் அதினின்றும் அமெரிக்காவுக்கு மாத்திரமில்லால் நாகரீகம் படைத்த உலகத்திற்கே பேராபத்து ஏற்படுமென்று அவர் உணர்ந்தார்.

"ஆரம்பம் முதற்கொண்டே பிரிடனுக்கு உதவி செய்வதும், பிரிடனை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதும் என்ற பரோபகார எண்ணத்தினால் இல்லையென்று, பிரிடன் தனக்காக மட்டும் போர்புரியாமல் அமெரிக்காவுக்காகவும் போரை நடத்தி வருகிறதென்றும், பிரான்ஸ் வீழ்ச்சி பெற்றபின் அப்போரை அது தன்னந்தனியே நடத்திவருகிறதென்றும் அவர் உணர்ந்தார்."

மிஸஸ் மங்களம், கனவான்களே,

நமது பெரிய சகாவான அமெரிக்காவின் ஜனாதிபதியான மிஸ்டர் ரூஸ்வெல்ட் திடீரென்று அகாலமரணமடைந்ததைப்பற்றி நமது மிகுந்த வருத்தத்தை பிரசுரப்படுத்தும் பிரேரணையை பிரேரேபிப்பதற்காக எனது வழக்கத்தை சிறிது மாற்றிக்கொள்ளவேண்டியது சரியென்று நினைத்து நான் மறுமுறையும் இச்சபையில் அக்கிராஸனம் வகிக்க முன் வந்துள்ளேன்.

வெற்றிகிடைக்கும் தருவாயில் நேசதேசத்தார்கள் இருக்கும் இத்தருணத்தில் அவர் இறந்துவிட்ட செய்தியானது எனக்கு ஏற்பட்டதுபோல் உங்களுக்கும் நம்பிக்கை கொள்ள முடியாத திடுக்கிடக்கூடிய செய்தியாக இருந்திருக்கும். அமெரிக்காவில் இதன்விளைவு அபாரமாக இருக்கவேண்டும். அந்நாட்டில் இவ்வளவு அளவற்ற செல்வாக்கு ஒருவருக்கும் இருந்ததில்லை. இதற்கு அத்தாக்ஷி வேண்டுமென்றால் அவரை சேர்ந்தாற்போல் நான்காவது முறையாக ஜனாபதியாக தேர்ந்தெடுத்ததே போதுமானதாகும். நேசதேசத்தார்கள் அவர்களுள் மிகவும் புத்திசாலியாகவும், அதிகமான நம்பிக்கைக்கு பாத்திரமாகவுமுள்ள ஒரு தலைவரை இழந்துவிட்டார்கள். அமெரிக்கர்களில் அநேகரிடமிருந்து வந்த தனித்திருப்பது என்ற குறுகிய கொள்கையிலிருந்து அவர்களை வேறுவழியில் திருப்பியதற்கு ஜனாதிபதியின் பகுத்தறிவும் தெளிவான எண்ணங்களும், தன்னிடத்திலும் ஜனநாயகத்திலும் அவருக்குள்ள நம்பிக்கையும்தான் காரணமாக இருந்தன. ஆரம்பம் முதல்கொண்டே பிரிடனுக்கு உதவி செய்வதும், பிரிடனை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதும் என்ற பரோபகார எண்ணத்தினால் இல்லையென்றும், பிரிடன் தனக்காகமட்டும் போர்புரியாமல் அமெரிக்காவுக்காகவும் போரை நடத்திவருகிறதென்றும், பிரான்ஸ் வீழ்ச்சிபெற்றபின் அப்போரை அது தன்னந்தனியே நடத்திவருகிறதென்றும் அவர் உணர்ந்தார். ஹிட்லர் போலந்தின்பேரில் அகாரணமாக படையெடுத்ததிலிருந்து நாகரீகத்துக்கும் கலைகளுக்கும் ஆபத்துவந்துவிட்டதென்று அவர் ஆரம்பத்திலேயே கண்டுகொண்டார். நாஸிகளுக்கு வெற்றி ஏற்பட்டால் அதினின்றும் அமெரிக்காவுக்குமாத்திரமல்லாமல் நாகரீகம் படைத்த உலகத்திற்கே பேராபத்து ஏற்படுமென்று அவர் உணர்ந்தார். ஆகிலும் அவர் பரம ஜாக்கிரதையாகவும், சாதுர்யமாகவும், படிப்படியாக நடவடிக்கைகளை கையாண்டுவந்தார். அவருக்கு பலத்த விரோதிகள் இருந்தார்கள். எனவே அமெரிக்கர்களின் அபிப்பிராயம் அவருடன் ஒத்துவரும் வரையிலும் அவர் அவசரப்படாமல் எதிரிவாய்ப்படாமல் வெகு ஜாக்கிரதையுடன் விஷயங்களை நடத்திவந்தார். ஆகவே அமெரிக்கா யுத்தத்தில் இறங்குமுன் 1941-ம் வருஷம் மார்ச்சு மாதத்திலேயே பிரிடனுக்கும் மற்ற நேசதேசங்களுக்கும் உடன் காலத்தில் கிரயம் கொடுக்காமல் தேவைப்படும் பொருள்களை வழங்கக்கூடிய குத்தகைக் கடன் மசோதாவை சட்டமாக இயற்றினார். மேலும் அவருடைய கட்டளையின்படி அமெரிக்கக் கடற்படை வடக்கு அட்லாண்டிக் கடலில் ரோந்து செய்வதில் உதவி செய்து வந்தது. இறுதியில், எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே ஜப்பான் அமெரிக்காவை முட்டாள்தனமாகத்தாக்கியதின் பயனாக அமெரிக்கா யுத்தத்தில் நேர்முகமாக ஈடுபட்டது. ஜப்பானிய நடவடிக்கையை ஹிட்லர் ருஷ்யாவைத்தாக்கிய தவறுடன் ஒப்பிடலாம். எதிரிகள் செய்த இத்தவறுதல்களுக்கு நாம் பெரும்பாலும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். கடவுள் அழிக்க உத்தேசிக்கிறவர்களை அவர் முதலில் மதிமயங்கும்படி செய்துவிடுவார் என்று ரோமர்கள் சொன்னது உண்மையாகிவிட்டது.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒரு பெரிய ராஜதந்திரி. ருஷ்யாவுக்கும் பிரிடனுக்குமுள்ள வித்யாசங்களை சரிப்படுத்துவதில் அவர் அதிகப்பிரயாசை எடுத்துக்கொண்டார். அவருடைய முயற்சி இல்லாவிடில் இந்த இரண்டு நாடுகளும் இவ்வளவு நெருங்கிய நட்புள்ளதாக இருக்குமென்பது சந்தேகம்தான். ஜனாதிபதி வில்ஸனைப்போல ரூஸ்வெல்ட் உயர்வான எண்ணங்களுள்ளவர். ரூஸ்வெல்டின் எண்ணங்கள் நடைமுறையில் அமுலுக்கு வரக்கூடியவை. ஆப்ரஹாம் லிங்கன், மற்ற கியாதிபெற்ற அமெரிக்கர்கள் முதலியவர்களின் சந்ததியைச் சேர்ந்த தகுந்த யோக்யதையுள்ளவர். அவர் இறக்குமுன் ஒரு ஸ்தாபனத்திற்கு அடிகோலியிருக்கிறார். அந்த ஸ்தாபனம், துர்கதியடைந்த சர்வதேச சங்கத்தைப் போலில்லாமல் உலகசமாதானத்தை பரிபாலித்துவருவதில் அகில பிரிடனுடையவும், அமெரிக்காவினுடையவும், ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக வேலைசெய்து வருமென்று நாம் நம்பலாம். அமெரிக்கர்களில் சிறந்தவரான ரூஸ்வெல்ட், ஐரோப்பாவில் நேசதேசப் படைகளுக்கு வெற்றி சமீபித்துவிட்டதையும்; வஞ்சக புத்தியுள்ள தூரக்கிழக்கிலுள்ள ஜப்பான் நன்றாக உதைக்கப்பட்டு, ஒவ்வொரு தீவாக துரத்தியடிக்கப்பட்டு, ஜப்பானிலுள்ள அவனுடைய குகைக்குள் பதுங்கும்படியாக செய்யப்பட்டதையும் கண் குளிரப்பார்த்தார். பிலிப்பைன்ஸில் அமெரிக்கக்கொடி மறுபடியும் நாட்டப்பட்டதையும் அவர்கண்டு களிப்புற்றார். யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு அவர் உதவியளித்ததுபோல சமாதானத்தை நிலை நாட்டுவதற்கும் அவர் உபயோகமுள்ளவராக இருந்திருப்பார். சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் தோன்றும் அநேக சிக்கலான பிரச்னைகளைத்தீர்ப்பதற்கு அவருடைய இயற்கையான சூக்ஷும புத்தியும், பிறரை வசப்படுத்தும் நடையும், இயற்கையான தந்திரமும், ராஜதந்திர சாமர்த்தியமும், பேருதவி அளித்திருக்கும். இது நடைபெறுவதற்கு இல்லாமல்போய்விட்டது. அவருடைய சக்தி அவர் ஸ்தானத்திற்கு வந்திருக்கும் ஸெனடர் ட்ரூமேனிடமும் மற்ற மந்திரிகளிடமும் உத்சாகத்தை ஊட்டுமென்றும், நாஸி தத்வத்தையும் ஜப்பானுடைய கெட்ட சக்தியையும் அழிக்கவேண்டுமென்ற தோற்றம் கஷ்டங்களுக்குள்ளான இந்த உலகத்தில் சமாதானமும்,

சுபிக்ஷமும் நிரம்பிய ஒரு யுகத்தை ஆரம்பிக்குமென்றும் நாம் பூர்ணமாக நம்பிக்கை கொள்ளலாம். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் போன்ற உண்மையான சுதந்திரப்பிரியரின் மரணம் அவருடைய ஜன்ம பூமிக்குமட்டும் இல்லாமல் நாகரீகம் படைத்த பூரா உலகத்திற்குமே பெரும் நஷ்டமாகும்.

இப்பொழுது என்னுடைய தீர்மானத்தை பிரேரேபித்து என்னுடைய சிற்றுரையின் தமிழ் மொழிபெயர்ப்பை முதலாவது கவுன்ஸிலர் படித்தபிறகு எல்லோரும் மௌனமாக இருந்து நிறைவேற்றுமாறு கோருகிறேன்.

தீர்மானம் பின்வருமாறு :—

அமெரிக்காவின் ஜனாதிபதியாகவும், கியாதிபெற்ற நிர்வாகியாகவும் ராஜதந்திரியாகவும் ஆப்தநண்பராகவும், அநேக பரம்பரை வரையில் அவருடைய ஞாபகம் இருக்கும்படியாக நேசதேசக் கக்ஷிக்கும், மானிட வர்க்கத்திற்கும் சேவை செய்தவருமான பிராங்க்ளின் D. ரூஸ்வெல்டின் அகால மரணத்தினால் ஏற்பட்ட அபாரமான நஷ்டத்தை இச்சபை இதன் மூலம் வெளியிடுகிறது.

இந்தத் தீர்மானம் உரிய இடத்திற்கு அனுப்பப்படும்.

---

# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 9—4—45 (திங்கட்கிழமை). | செம்படை கோனிக்ஸ்பர்க்கைப் பிடித்தது. அமெரிக்கர்கள் எஸ்ஸனுக்குள் நுழைந்தார்கள். |
| 10—4—45 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப் படைகள் வடக்கு இதாலியில் புதிய தாக்குதலைத் துவக்கின. அமெரிக்கப் படைகள் ரெயூக்யூஸ் தீவிலுள்ள டிசுகனேப் பிடித்தன. அமெரிக்கர்கள் ஹனோவரைப் பிடித்தார்கள். |
| 11—4—45 (புதன்கிழமை). | பிரிடிஷ் விமானப் படை ஜெர்மனியின் யுத்தக் கப்பலான அட்மிரல் ஷீரை மூழ்கடித்தன. |
| 12—4—45 (வியாழக்கிழமை). | ஜனாதிபதி ரூஸ்வெல்ட் இறந்தார். மிஸ்டர் ட்ருமன் அமெரிக்க ஜனாதிபதி பதவி ஏற்றார். நேசதேசப் படைகள் எல்ப் நதியைத் தாண்டின. அமெரிக்கர்கள் ஷ்வீன்பர்ட்டைப் பிடித்தன. |
| 13—4—45 (வெள்ளிக்கிழமை). | ருஷ்யர்கள் வியன்னா பூராவையும் விடுவித்தார்கள். அமெரிக்கர்கள் ஜேனாவைப் பிடித்தார்கள். |
| 14—4—45 (சனிக்கிழமை). | நேசதேசப் படைகள் இதாலியில் சில்லாரோ நதியைத் தாண்டின. பிரிடிஷ் படைகள் ஹாலந்திலுள்ள ஆர்ன்ஹெமைப் பிடித்தன. |
| 15—4—45 (ஞாயிற்றுக்கிழமை). | ஹாலந்திலுள்ள போலிஷ் துருப்புகள் வடக்குக் கடலை அடைந்தன. நேசதேசப் படைகள் இதாலியில் இமோலாவைப் பிடித்தன. |
| 16—4—45 (திங்கட்கிழமை). | அமெரிக்க 3-வது சேனை ஸெகோஸ்லாவேகியா எல்லையை அடைந்து ஜெர்மனியை இரண்டாகத் துணித்துவிட்டது. நேசதேசப் படைகள் பர்மாவில் அரக்கானிலுள்ள டாங்குப்பை ஆக்கிரமித்தன. |

# (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை.—**

(1) **ஹாலந்து.**—ஆர்ன்ஹெம் பிரிடிஷ் வசமாகிவிட்டது. வடக்கு ஹாலந்திலுள்ள குரோனிஞ்சன் சரணடைந்துவிட்டது. வடக்கு ஹாலந்து பூராவும் விடுதலையடைந்துவிட்டது. ஹாலந்தில் அபெர்டின் பிராந்தியத்திலுள்ள தப்பி ஓடும் மார்க்கம் துணிக்கப்பட்டுவிட்டது. அபென்டீர்னைத்தாண்டி முன்னேறிய கனடியப்படைகள் குடார்சீ நதியின் தென்கரையை அடைந்துவிட்டன. மற்றொரு படை ஆர்ன்ஹெமுக்கு வடக்கில் அதனுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முன்னேறி வருகிறது.

(2) **வடக்குப் பகுதி.**—பிரிடிஷ் படைகள் ஹனோவருக்கு வடகிழக்கில் 25 மைல்களி லுள்ள செல்லாவைத் தாக்கின. ரெதெமும் லோனும் பிடிபட்டன. அவைகள் பிரெமன் ஸால்டா இருப்புப் பாதையை துணித்துவிட்டன. ஹாம்பர்க் தற்காப்புகளைத் துணித்து விட்டார்கள்.

(3) **அமெரிக்க 9-வது சேனை.**—சென்ற வாரத்தில் எஸ்ஸனைப் பிடித்தபின், கெல்ஸன் கார்ச்சன், டியிஸ்பர்க், மாக்டீபர்க் முதலியவற்றைப் பிடித்தன, டார்ட்மண்ட் ஆடிக்கொண்டி ருக்கிறது.

(4) **அமெரிக்க 1-வது சேனை.**—லீப்ஸிக்குக்குள் நுழைந்தது.

(5) **அமெரிக்க 3-வது சேனை.**—செகோஸ்லாவேகியாவுக்குள் நுழைந்து விட்டது. கோபர்க், குவெர்பர்ட், வேமார், பாப், பேயிருத், கேரா, எயிஸன்பர்க் முதலியவைகள் பிடிபட்டன.

(6) **அமெரிக்க 7-வது சேனை** ஷ்வின்பர்ட்டைப் பிடித்தபின் நூரம்பர்க்குக்குள் நுழைந் தது.

(7) **பிரெஞ்சு 1-வது சேனை.**—பேடனையும் ராஸ்டாலையும் பிடித்தது.

(8) **பிரெஞ்சுப் படைகள்.**—பிரான்ஸின் மேற்குக் கடற்கரையில் போர்டோவிலுள்ள ஜெர்மானியர்களை சுத்திசெய்து விட்டன.

**கிழக்குப் போர்முனை.—**

(1) கோணிக்ஸ்பர்க்குக்கு வடமேற்கிலுள்ள சாம்லாந்து தீபகற்பத்தில் கடும் போர் நடை பெறுகிறது. இந்த பிராந்தியத்தில் பின்ஷேபன் விழுந்து விட்டது.

(2) வியன்னா விழுந்துவிட்டது. வியன்னாவிலிருந்து 16 மைல்களிலுள்ள லிஸ்டார் ஸ்டார்ட் என்ற எண்ணை பிரதேசம் பிடிபட்டது. வியன்னாவைச் சுற்றியும் அதற்கு சமீபத் திலுமுள்ள கீழ்கண்ட நகரங்கள் பிடிபட்டன. ஆகன்பிரன், ஹோடோனின், என்பராலட், வாக்ராம், டர்ஸ்டென்பெல்ட்.

**இதாலி.**—வசந்தகாலத் தாக்குதல் துவக்கிவிட்டது. எட்டாம் படை சான்டெர்னோ, சில்லாரோ நதிகளைத்தாண்டி விட்டது. ஆட்ரியாடிக் கடற்கரையில் கோமாகியோ ஏரிக்கு மேற்கிலுள்ள டோஸ்கானெல்லாவும் ஆர்ஜெண்டாவும் பிடிபட்டன. 5-வது சேனை காரார, மாண்டி சோல், மாண்டிகாஸ்டலினோ, மாண்டி டிராமாண்டோ, மாண்டி பீரோவை பிடித்தன அல்லது அவைகளுக்குள் நுழைந்து விட்டன.

**பஸிபிக்.—**

(1) மத்திய பிலிப்பைன்ஸிலுள்ள போகோல் தீவு பிடிபட்டது, மாண்டானோத்தீவில் மாலாபாங்கிலும், பாராங்கிலும் படைகள் இறங்கின.

(2) ஓகினாவாவின் வடக்குக் கோடிக்கு படைகள் வந்துவிட்டன.

(3) ஈஷிமாவின் மூன்றில் இரண்டு பாகம் நமது வசமாகிவிட்டது.

**சைனா.**—ஹோனான்—ஹூபே போர்முனையில் பதில் தாக்குதலைச் செய்த சீனப்படை கள் லா ஹோ கௌ என்ற நகரத்தைத் திரும்பிப்பிடித்தன.

**பர்மா.**—பர்மாவிலுள்ள எண்ணெய் பிரதேசங்களுக்கான போர் ஆரம்பமாகி விட்டது. சாங் என்ற முக்கியமான எண்ணெய் பிரதேசம் பிடிபட்டது. இந்த வாரத்தில் கீழ்கண்ட இடங்கள் விடுவிக்கப்பட்டன. தாழியிலிருந்து ஷான் சமஸ்தானங்களுக்குச் செல்லும் ரஸ்தாவிலுள்ள ஹிலேயிங்க்டப், கியாக்பாடாங்க், குவேகியோ, சிங்கு, சாலி.

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**8—4—45** (ஞாயிற்று கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—4 ரயில் தளங்கள், 3 விமான நிலையங்கள், 2 தளவாட டேப்போக்கள், 1 எண்ணெய் சேமிப்பு டேப்போ, சரிபார்க்கும் தொழிற்சாலை.—*மத்திய ஜெர்மனி* (Central Germany).

கப்பல்கள்.—*ஸ்காகராக்* (Skagarak), *காட்டிகாட்* (Kattegat).

ஸ்டேஷன்கள்.—*பிரென்னர் கணவாயினின்றும் ஆஸ்திரியாவிற்குச் செல்லும் ரயில்வே லயன் மேலுள்ள ஸ்டேஷன்கள்.*

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—இலக்குகள்.— பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—*நெதர்லாந்து கிழக்கு இந்தியத் தீவுக் கூட்டத்திலுள்ள பீமா* (Bima) *தீவு.*

**பர்மா (Burma).**

பாலங்கள்,—*பெகு* (Pegu) *வின் வடகிழக்கு.*

விமான எதிர்ப்பு பீரங்கி நிலையங்கள் துவியல்கள்.—*புரோம்* (Prome).

எண்ணெய் சேமிப்புகள் துவியல்கள்.—*டாங்குப்* (Taungup)*பின் வடக்கு.*

சேமிப்பு பிரதேசம்.—*தாயெட்கான்* (Thayetkon).

இலக்குகள்.—*கியாக்படாங்* (Kyaukpadaung).

**9—4—45.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—U-படகு தங்குமிடங்கள் எண்ணெய் சேமிப்புகள்—*ஹாம்பர்க்* (Hamburg).

ரயில் தளங்கள், பாலங்கள்.—*வட இதாலி* (N. Italy).

ரயில் லயன்கள், பாலங்கள்.—*தென் ஜெர்மனி* (Southern Germany).

எண்ணெய்க் கிணறுகள்.—*மத்திய ஜெர்மனி.*

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள், ரயில் ஸாதனங்கள்.—*பார்மோஸா* (Formosa).

ஜப்பானிய சைனியங்கள்.—*ஒகினவா* (Okinawa).

விமானச் சண்டைகள்.—*பாங்காக்* (Bangkok) *பிரதேசம்.* (19 ஜப்பானிய விமானங்கள் *சுட்டுத்தள்ளப்பட்டன*).

கப்பற் கட்டுந் துறைப் பிரதேசங்கள்.—*ஹாங்காங* (Hongkong).

**பர்மா (Burma).**

ரயில்வேக்கள்.—*ரங்கூனின் வடமேற்கு* (Rangoon).

ரயில்வேப்பாலம்.—*லெட்பாடன்* (Letpadan).

நீராவி யந்திரங்கள், வண்டிகள்.—*டவுங்கூ* (Toungoo)*வின் தெற்கு.*

எதிரி தளங்கள்.—*போபா* (Popa)*வின் அருகிலும், அரக்கான்* (Arakan).

எதிரி சைனியங்கள்.—*கியாகூஸ்* (Kyukuse).

பெட்ரோல் துவியல்கள்.—*டாஙகெய்* (Taunggyi)*யின் தென்மேற்கு.*

ஜப்பானிய சைனியங்கள் துவியல்கள்.—*அரக்கான்* (Arakan).

தரைமிதிறங்கும் விமானங்கள்.—*மெர்குய்* (Mergui).

**10—4—45.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—7 விமான நிலயங்கள்—*பெர்லின்* (Berlin) *பிரதேசம்.*

பால்பேரிங் நிலயங்கள்.—*ஸ்வெய்ன்பர்ட்* (Schweinfurt).

சேனைகள், யுத்த தளவாடங்கள், தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—*லிப்ஸிக்* (Leipzig).

எதிரிக் கப்பல்கள்—*ஸ்காகராக்* (Skagarak), *காட்டிகாட்* (Kattegat).

பாலங்கள்.—*செக்கோஸ்லோவாக்கியாவிலுள்ள எகர்* (Eger).

ரயில்வே தளங்கள்.—*பிளாயன்* (Plauen).

விமானச் சண்டைகள்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—ரயில்வே தளங்கள்—*லிப்ஸிக்*(Leipzig).

இலக்குகள்.—*பெர்லின்* (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

ஜப்பானிய தளம்.—*கியாக்படாங்* (Kyaukpadaung).

துருப்பு சேமிப்புகள்.—*பின்மாவின்* (Pyinmana) *தெற்கு.*

ஜப்பானியமுகாம்கள்.—*மெய்க்திலா*(Meiktila).

தளவாடக் துவியல்கள்.—*கியாகூஸ்*(Kyaukse).

துருப்புகள், ஸப்ளைகள்.—*அரக்கான்* (Arakan).

**11—4—45.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—எண்ணெய் சேமிப்பு டேப்போக்கள், தளவாடக் துவியல்கள், சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்—*மியூனிச்* (Munich), *ரீஜன்ஸ்பர்க்* (Regensburg), *நூரம்பர்க்* (Nuremburg) *பிரதேசங்கள்.*

ரயில்வே தளங்கள்.—நூரம்பர்க் (Nuremburg), பாய்ரியூத் (Bayreuth).
விமானச்சண்டைகள்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
பீரங்கி ஸ்தாபனங்கள்.—பலத்த முனைகள் லூகோ (Lugo).
போக்குவரத்துகள்.—போ (Po) சமவெளி.
இரவு.—பேர்லின் (Berlin).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியசைனியங்கள்-ஒகினுவா (Okinawa).
இலக்குகள்.—டோக்கியோ (Tokyo).

**பர்மா (Burma).**

எதிரி முனைகள்.—அரக்கான் (Arakan).

**12—4—45.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—2 ஜெர்மன் விமான நிலையங்கள்—லீப்ஸிக்கிற்கு (Leipzig) அருகில்.
கப்பல்கள்.—நார்வீஜியன் கடற்கரை.
எதிரி போக்குவரத்துகள்.—ஹாலந்து (Holland) முதல் பால்டிக் (Baltic) வரை.
பீரங்கி ஸ்தாபனங்கள்.—எம்டன் (Emden), பெர்மன் (Bermen).
விமானச் சண்டைகள்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
ராணுவ இலக்குகள்.-வட இதாலி (N. Italy).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலையங்கள், இதர இலக்குகள்.—பார்மோஸா (Formosa).
இலக்குகள்.—ஸபாங் (Sabang).

**பர்மா (Burma).**

ரேடியோ ஸ்டேஷன்கள்.—டவுன்கூ (Toungoo).
சேமிப்புகள்.—ரங்கூனுக்கு (Rangoon) அருகில்.
எதிரி சைனியங்கள்.—அரக்கான் (Arakan).
இலக்குகள்.—புரோம் (Prome), டாங்குப் (Taungup) ரஸ்தா.
கிராமங்கள்.—மெய்க்திலா (Meiktila) பிரதேசம்.
பீரங்கி ஸ்தாபனங்கள்.—டவாயிற்கும் (Tavoy) மேல்மீனுக்கு (Moulmein) இடையில்.
கப்பல்கள்.—நிகோபார் (Nicobar) தீவுகள்.

**13—4—45.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.-போக்குவரத்துகள்—மத்திய ஜெர்மனி (Central Germany).
எதிரிக் கப்பல்கள்.-ஸ்காகராக் (Skagarak) காட்டிகாட் (Kattegat).
விமானச் சண்டைகள்.—ருஷ்ய யுத்தம் அரங்கம் முழுவதும்.
ரயில்வே பாலங்கள்.—ஆஸ்திரியா (Austria).
இலக்குகள்.—வட இதாலி (N. Italy).
இரவு.—இலக்குகள்—கீல் (Kiel).

**தூரக்கிழக்கு (Far East).**

தளவாட சேமிப்பு பிரதேசங்கள்.—டோக்கியோ (Tokyo).
ஸ்தாபனங்கள்.—வடகிழக்கு லூஸான் (N. E. Luzon).
ஜப்பானிய போக்குவரத்துகள்.—டாவோ (Davao).

**பர்மா (Burma).**

துவியல்கள்.—ரங்கூன் (Rangoon) மாண்டலே (Mandalay) ரயில்வே.
ரயில்வேக்கள்.— லெட்பாடன் (Letpadan).
ரஸ்தா, ரயில், நதி, கடற்கரை, ஸப்ளைலயன்கள் —தென் பர்மா (SouthBurma).
சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.
இலக்குகள்.—டவுன்கூ (Toungoo), பியு (Pyu), பெகு (Pegu).

**14—4—45.** (சனிக்கிழமை).

**ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.**

பகல்.—விமான நிலயங்கள், போக்குவரத்துகள்.-நேசதேச சைனியங்கள் முன்னேறும் இடங்களுக்கு அருகில்.
ஜெர்மன் கப்பல்கள்.—நார்வீஜியக்கடற்கரை (Norwegian).
4 ஜெர்மன் தளவாடத் தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து டெப்போ.—வட இதாலி (N. Italy).
ஸப்ளைகள்.—போ (Po) சம வெளி.
ரயில் ரஸ்தாக்கள்.—பவேரியா (Bavaria), ஆஸ்திரியா (Austria).
2 முனைகள்.—பிரென்னர் கணவாய் (Brenner Pass).
இரவு.-இலக்குகள்-போட்ஸ்டாம் (Potsdam).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—டோக்கியோ (Tokyo).
ரயில் ஸ்தாபனங்கள்.—இந்தோ-சைனு (Indo-China).
மின்சார நிலயம் —பாங்காக் (Bangkok).

**பர்மா (Burma).**

பீரங்கி ஸ்தாபனங்கள், சேமிப்புகள்.-புரோம் (Prome).
துருப்புகள் மோட்டார் வண்டிகள்.—டவுன்கூ (Toungoo).
ரயில்வேப் பாலம்.—பையூ (Pyu).
ரயில்வே இஞ்ஜின்கள் சேமிப்புகள்.—தாஸியின் (Thazi) கிழக்கு.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**9—4—45.** (திங்கட்கிழமை) **to 15—4—45.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia.)—எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.
தூரக்கிழக்கு (Far East).—ஒரு தகவலும் இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**ஜனாதிபதி ரூஸ்வெல்ட்** இறந்து போய்விட்டார். அமெரிக்கர்களுள் பிரமுகராகவும், புத்திசாலியாகவும், தைரியமுள்ளவராகவும் வீரத் தன்மையுள்ளவராகவும், அன்புள்ள மனப்பான்மையுள்ளவராகவுமிருந்த ஒரு பெரியார் மறைந்துவிட்டார். சர்ச்சிலுடனும், ஸ்டாலினுடனும் சேர்ந்து அவர் ராணுவ திட்டங்களைத் தயாரித்தார். அவைகள் தான் யுத்தத்தினால் துன்பங்களை அனுபவித்து வரும் உலகத்தின் கஷ்டங்களை நிவாரணம் செய்துவருகின்றன. அத்துடன் சமாதான காலத்திற்குரிய திட்டங்களுக்கும் அவர் ஏற்பாடு செய்து வந்தார். ஆனால் அவருடைய ஆயுட்காலம் முடிந்துவிட்டது நாம் துக்கிக்கவேண்டுமேயல்லாது கடவுளின் திருவுள்ளத்தைக் கண்டனம் செய்யக்கூடாது. அவருடைய பூதசரீரம் மறைந்தாலும் அவருடைய ஆத்ம சக்தி நம்மைவிட்டு விலகவில்லை. அவர் பரிசிரமப்பட்ட வெற்றி சமீபத்துவிட்டது. கடவுளின் திருவருள் இருந்தால் அவருடைய சமாதான திட்டமும் கூடிய சீக்கிரத்தில் பூர்த்தியாகிவிடும்.

செல்வந்தர் குடும்பத்தில் ஜனித்து, செல்வமாக வளர்க்கப்பட்டு, தேசத்தின் தலைவர் பதவியை வகித்த அவர் சாதாரண மனிதனை ஆதரிப்பவர். இப்பொழுது பிரக்யாதிபெற்ற நான்கு சுதந்திரங்களை அவர் பிரகடனம் செய்ததிலிருந்து அவர் மிகுந்த கவலை கொண்டு பொது மக்களின் க்ஷேமத்தைக் கோரினவர் என்பது நன்கு விளங்கும். மனிதவர்க்கத்துக்கு சாச்வதமான சமாதானத்தை உண்டுபண்ண அவர் அட்லாண்டிக் சாஸனம், டம்பார்டன் ஓக்ஸ் மகாநாடு, சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்கு ஏற்பாடு செய்தார். அமெரிக்கர்களை தனித்திருக்கும் மனப்பான்மையிலிருந்து யுத்தத்திலீடுபடும்படியாக மனப்பான்மையை மாற்றியதும் அவர் தான்.

ஐரோப்பாவில் ஹிட்லர் தோன்றியது போல் அமெரிக்காவில் ரூஸ்வெல்ட் அதிகாரத்துக்கு வந்தார். இருவரும் 1933-ம் வருஷத்தில் அதிகாரத்துக்கு வந்தார்கள்.

அதன்பின் ரூஸ்வெல்டின் ஜிவ்ய சரித்திரம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். முதலாவது அவர் முதல் தடவையாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது, அமெரிக்காவில் வேலையில்லாதத் திண்டாட்டத்தினால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அவருடைய புதிய ஏற்பாட்டின் மூலம் சிறிது நிவாரணம் ஏற்பட்டது. ஹிட்லர் ஆயுதங்களை தயார் செய்து வந்த பொழுது ரூஸ்வெல்ட் விவசாயத்தையும், தொழிற்சாலைகளையும் அபிவிருத்தி செய்து, அகதிகளுக்கு உதவியளித்தும் ஜனங்களுக்கு ஆகாரவசதியளித்தும் வந்தார்.

அவருடைய இரண்டாவது ஜனாதிபதித் தகுதி முக்கியத்வமுள்ளது. அப்பொழுது தான் ஹிட்லர் வெர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தை உதறிவிட்டு போருக்குத் தயார் செய்து வந்தான். இந்த அபாயத்தை உணர்ந்து ரூஸ்வெல்ட் பொதுஜன கான்ஸர்வேஷன் படையைத் தயாரித்தார். அதில் $2\frac{1}{2}$ மிலியன் ஆடவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அவர்கள் தான் இப்பொழுது ஐரோப்பாவிலும் பஸிபிக்கிலும் போர் நடத்திவருகிறார்கள். அமெரிக்கக் கடற்படையையும் சேனையையும் அவர் அபிவிருத்தி செய்வார். சாமான் கப்பல்களில் கவசங்களை அமைத்தார். 1940-ம் வருஷத்தில் பிரிடன் தன்னந்தனியே நின்று போரை நடத்தியபொழுது அது அமெரிக்காவுக்காகவும் போரை நடத்தி வருகிறதென்றும் மதித்து குத்தகைக் கடன் மசோதா மூலம் அதற்கு உதவியளித்து வந்தார். "இது மிகவும் சுயநல மற்ற, பொருளாதார உதவி" என்று மிஸ்டர் சர்ச்சில் நன்றியறிவுடன் சொன்னார்.

மூன்றாவது தகுதியில் அவர் ராணுவப் புகழ் பெற்றார். பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் வஞ்சக புத்தியுடன் தாக்கியதால் அமெரிக்கா யுத்தத்தில் புகுந்துகொண்டது. அவருடைய தூண்டுதலின் பேரில் அமெரிக்கர்கள் பிரிடனுடன் சேர்ந்து ஆபிரிக்காவிலும், இதாலியிலும், தன்னந்தனியாக பஸிபிக்கிலும் வெற்றி பெற்றார்கள்.

நான்காவது தகுதியில் ஜெர்மனி பேரில் படையெடுப்பு ஏற்பட்டது. வெற்றி கிடைக்கும் தருவாயில் அவர் மறைந்துவிட்டாரென்பது வியசனிக்கத்தக்கதாகும். இப்பொழுது நேச தேசப்படைகள் பெர்லினை அணுகிவருகின்றன.

அவர் கடைசியாக மானிடவர்க்கத்துக்கு அனுப்பிய செய்தி பின்வருமாறு :—

"எதிரிகளை முறியடித்தால் மட்டும் போதாது. இந்த அக்கிரமத்திற்குக் காரணமான சந்தேகங்கள், பீதிகள், அஞ்ஞானம், பேராசை முதலியவற்றை ஒழிக்க நாம் முயலவேண்டும். நாகரீகம் பிழைத்திருக்கவேண்டுமானால் மானிடர்களுக்குள் நல்ல சம்பந்தங்கள் இருக்கக்

கூடிய விஞ்ஞான சாஸ்திரத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற பிரச்னையை நாம் தீர்க்க வேண்டும். நிர்வாகங்களுக்குள் இருக்கும் மனஸ்தாபங்களைத் தீர்க்க ஏராளமான ஜனங்களை அழிப்பது என்ற உபயோகமற்ற, அபத்தமான நடவடிக்கைக்கு முடிவுவேண்டும்''.

அவருடைய சமாதி சாஸனம் மிஸ்டர் சர்ச்சில் சொல்லுவதுபோல் பின்வருமாறு இருக்கலாம்.—''நாம் அறிந்தவர்களுக்குள் பிராங்க்ளின் D. ரூஸ்வெல்ட் ஒரு பெரிய அமெரிக்க சிநேகிதர், சுதந்திர பிரியர், புதிய அர்த்த கோளத்திலிருந்து பழைய கோளத்திலுள்ளவர்களுக்கு உதவியும், ஆறுதலும் அளித்தவர்.''

ஸெயிண்ட் பால்ஸில் ரூஸ்வெல்ட்டுக்காக நடந்த பிரார்த்தனையில் மிஸ்டர் சர்ச்சில் கண்ணீர் விட்டாராம். இது சரிதான். ரூஸ்வெல்ட் ஒரு சிறந்த ராஜதந்திரி என்றும், காரியவாதியென்றும், யுத்த தலைவர் என்றும் அவர் பாராட்டினர். அவரிடத்தில் மிஸ்டர் சர்ச்சிலுக்கு மதிப்பும் அன்பும் அதிகமாயிருந்தது.

வி வி வி வி வி

**ஸெனடர் ஹாரி ட்ருமான்.** அமெரிக்காவின் வைஸ் பிரஸிடெண்ட் அமெரிக்க அரசியல் அமைப்புப்படி ஜனாதிபதியானர். அவர் 32-வது ஜனாதிபதி. ஜனாதிபதி இறந்தபின் அந்த ஸ்தானத்துக்கு வந்தவர்களில் அவர் 6-வது நபராகும். நல்ல வம்சத்தில் உதித்த ரூஸ்வெல்டைப் போலில்லாமல் புதிய ஜனாதிபதி தூசி தட்டுகிறவராகவும், பாங்கு கிளார்க்காவும், சில்லரை வியாபாரியாகவும் இருந்து மெதுவாக முன்னேற்றமடைந்தார். சமீபகாலத்தில் செனட் யுத்த புலன் விசாரிக்கும் கமிட்டியின் தலைவராகயிருந்து அனாவசியச் செலவையும் வீண் அழிவையும் தடுக்க அவர் முயற்சி செய்து வந்தார். அமெரிக்க காங்கிரஸ் சபையில் ஆற்றிய முதல் சொற்பொழிவிலேயே இறந்துபோன ரூஸ்வெல்டின் திட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்துவோமென்று அமெரிக்காவுக்கும் உலகத்துக்கும் அவர் உறுதிகூறினர். அவர் பின்வருமாறு கூறினர்.

''யுத்தக் குற்றவாளிகளைத் தண்டிப்பதில் நாம் கொண்ட உறுதியைக் கைவிடமாட்டோம். அவர்கள் எங்கு சென்றாலும் அவர்களை விடப்போவதில்லை.

''சமாதானம் வேண்டுமென்று ஆசைப்பட்டால் மட்டும் போதாது. அதற்காக நாம் பாடுபட்டு, போரை நடத்தவேண்டும்.

''நம்முடைய முயற்சியில் சோர்வு காணப்படக்கூடாது. நமது இறந்த தலைவர் பின்புறம் பார்க்கவில்லை. அவர் எப்பொழுதும் முன்நோக்கிவந்தார். நாமும் அவ்விதம் செய்யவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அமெரிக்காவும் அவ்விதமே செய்துவரும்.

''அபாரமான தியாகங்களைச் செய்தவர்களுக்காகவும் இறந்துபோன ஜனாதிபதிக்காகவும் நாம் அவ்விதமே செய்துவருவோம்''.

இதைவிட தெளிவான, நிச்சயமான உறுதிமொழி காணப்படமுடியாது.

வி வி வி வி வி

**யுத்த வேகம்.** ஐரோப்பிய யுத்தத்தில் அதிக வேகம் காணப்படுகிறது. ஒவ்வொரு நிமிஷமும் நேசதேசப்படைகள் ஜெர்மனியைச் சின்னாபின்னம் செய்துவருகிறார்கள். பிரசித்திபெற்ற ஜெர்மன் நகரங்கள் விழுந்துவிட்டன. ஒரு நகரமும் சரணடையக்கூடாதென்று ஹிம்லர் உத்தரவிட்டிருக்கிறான். ஹனோவரில் ஒவ்வொரு ஸோல்ஜரும் சாகும்வரையில் போர்புரிவதாக வாக்குறுதி செய்கிறான். ஆகிலும் வெகு சீக்கிரத்தில் அந்த நகரம் வீழ்ச்சிபெற்றது. அங்கிருந்த உத்தியோகஸ்தர்கள் நேசதேசத்தார்களைக் காண முன்வந்தார்கள். ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அவர்களை வரவேற்றார்கள்.

முதல் நாள் தாக்குதலிலேயே ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ள எஸ்ஸன் விழுந்தது. பிரஷ்யாவிலுள்ள கோனிஸ்பர்க்கும் விழுந்தது. ஜெர்மனியின் கிழக்குத் தற்காப்பான வியன்னா ருஷ்யர் வசமாகிவிட்டது. பிரிடிஷ் படைகள் பிரெமன் நகரத்தில் வாசற்படியில் தாக்கிவருகிறார்கள். தினசரி 20,000 கைதிகள் அகப்படுகிறார்கள். நேசதேசத்தாருக்கு அவர்களுக்கு இடவசதியை செய்துகொடுக்கும் பிரச்னை தோன்றிவிட்டது.

ஜெர்மனியில் எங்கு பார்த்தாலும் ''மறுபடியும் 1918-ம் வருஷ சம்பவங்கள் இல்லை'' என்று எழுதப்பட்டிருக்கிறது. உபயோகமற்ற வார்த்தைகள்.! மிஸ்டர் சர்ச்சில் சொன்ன பிரகாரம் எங்கு பார்த்தாலும் சிறிது சிறிதாக ஜெர்மானியர்கள் சரணாகதி செய்துவருகிறார்கள் யுத்தத்தை நடத்துவதில் பொதுமக்களுக்கு நம்பிக்கை இல்லை. ''சாப்பிடுங்கள், குடியுங்கள்

சந்தோஷத்துடனிருங்கள். நாளைக்கு இறப்பது நிச்சயம்" என்றுதான் அவர்களுக்கு இப்பொழுது தோன்றிவிட்டது. சொந்த வீட்டையும் நாட்டையும்விட அவர்களுக்கு சாராயமும், புகையிலையும், உணவுப்பொருள்களும், ஜமக்காளங்களும்தான் மிகுதியாகத் தேவைப்படுகின்றன.

"உங்களைப் பின்வாங்கும்படி உத்தரவிடுகிறவர் சேனையில் எவ்வித அந்தஸ்து உள்ளவராக இருந்தாலும் அவரைக் கைதுசெய்து சுட்டுக்கொன்றுவிடவேண்டும்" என்று ஹிட்லர் ஸோல்ஜர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறான். ஆபீஸர்களை ஒழுங்கு முறைக்குக் கொண்டுவர ஸோல்ஜர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருப்பது விசித்திரமாக இருக்கிறது. 'ராணுவ ரக்ஷணையற்ற நகரமில்லை." "சரணாகதி யில்லை" என்ற உத்தரவின் கீழ் கோனிஸ்பர்க்கின் மேயரைக் கொலைசெய்த ஹிம்லரின் உத்தரவிற்கு இது ஒத்ததாகும். படைகளில்லாமல் நகரங்களை எவ்விதம் தற்காப்பு செய்யமுடியும். பலஹீனமடைந்த ஜெர்மன் சேனைக்கு எல்லோரையும் சேர்த்துக்கொண்டபின் தற்காப்புப் படைகளை எவ்விதம் சேர்க்கலாம். ஹிம்லரின் உத்தரவுக்கு ஆக்ஷேபணையாக ஆட்டன்பர்க்கின் மேயர் அந்த நகரத்தை ராணுவ ரக்ஷணையற்ற நகரம் ஒன்று சொன்னதும் சகஜம்தான்.

பெர்லினைத் தற்காப்பு செய்ய அடால்ப் ஹிட்லர் வாலண்டியர் படையைத் தயாரித்திருக்கிறான். ஹிட்லரின் பெயர் ஏற்பட்டதே கெட்ட சகுனமாகும். ஹிட்லர் அரணும், ஹிட்லர் சின்னமும், மற்ற ஹிட்லர் ஸ்தாபனங்களும் தற்காப்புகளும் சென்றவழியே இந்தப் படையும் போய்விடும்.

வி வி வி வி வி

**முக்கிய சம்பவங்கள்.** இந்த வாரத்தில் நடைபெற்ற அநேக சம்பவங்களிலிருந்து ஹிட்லருக்கு நம்பிக்கைக்கு யாதொன்றுமில்லை என்று தெரியவருகிறது. முதலாவதாக, படைகளுக்கு அனுப்பிய கடைசிச் செய்தியில் மேற்கில் நேசதேசப்படைகள் ஊடுருவிச் சென்றுவிட்டனவென்றும் கிழக்கில் ருஷ்யர்கள் படைகளைக் குவித்து விட்டார்களென்றும், ருஷ்யர்கள் வெற்றி பெற்றால் ஜெர்மன் ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் அதோகதி ஏற்படுமென்றும் ஹிட்லர் ஒப்புக்கொள்ளுகிறான்.

இரண்டாவதாக, S. S. படைகளின் பூரராக ஹிம்லரை நியமித்த திட்டத்தில் ஹிட்லர் அவனுடைய அதிகாரத்தை இழந்து விட்டான். ஜெர்மன் ராணுவ அதிகாரிகளின் தலைவருடனும் நாஸிக்கக்ஷித் தலைவருடனும் ஒத்துழைக்கவேண்டுமென்று அவனுக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக, துருக்கியிலிருந்த மாஜி அயல்நாட்டு தூதரான பிரான்ஸ் வான் பேபன் இப்பொழுது நேசதேசக் கைதியாகி பின்வருமாறு சொல்லுகிறான். இந்த யுத்தம் முடிந்தால் தேவலை என்று அவன் சொல்லுகிறான்.

நான்காவதாக, ஹாலந்தின் நாஸி கவர்னரான டாக்டர் சேயிஸ் இன்குவார்ட் நாஸிகளுடன் சேர்ந்து எங்கேயோ ஒளிந்து கொள்ளுவதற்காக கொள்ளையடித்த சொத்துக்களையும் எடுத்துக்கொள்ளாமல் ஓடிவிட்டான்.

ஐந்தாவதாக, நாஸிகளிடம் விச்வாசமுள்ள பீல்ட் மார்ஷல் மோடல் ஜப்பானியர்களைப் போல தற்கொலை செய்து கொண்டான்.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.** மேற்குப் போர்முனையில் ஒரு மாறுதல் ஏற்பட்டுவிட்டது. நேசதேச முன்னேற்றம் வேகம் தணிந்துவிட்டது. எல்பே நதிக்கரையில் ஹாம்பர்குக்கும் டெர்ஸானுக்கும் மத்தியில் நேசதேச முன்னேற்றம் நின்றுவிட்டது. மூன்று வாரங்களுக்கு முன் ரைன் நதியைக் கடந்தபின் 300-மைல்கள் முன்னேறிய பின் நேசதேசத்தார்கள் ஜெர்மன் தற்காப்புகளிருக்கும் ஒரு இடத்தை அடைந்துவிட்டார்கள். இந்தத் தற்காப்பை நொருக்க படைகள் குவிக்கப்படுகின்றன. அதன் பின் மறுபடியும் படைகள் முன்னேறும்.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.** ஓடரும் நியஸியும் சேருமிடத்திலிருந்து குயஸ்டிரினுக்கு வடக்கில் ஓடர் நதியின் முன்னேறும் வாசல் வரைக்கும் 60-மைல்கள் நீளமுள்ள போர்முனையில் மார்ஷல் சூகோவ் பெர்லினை நோக்கி டாங்கிகளுடனும் பீரங்கிகளுடனும் முன்னேறி வருகிறான். அதற்குத் தெற்கில் ஆஸ்திரியா போர்முனையில் வடக்கிலும் மத்தியிலும் மாலினோவ்ஸ்கியும் மத்தியிலும் தெற்கிலும் டால்பூகினும் தெற்கு ஜெர்மனியை நோக்கி முன்னேறுகிறார்கள். கிழக்குப் போர்முனை பூராவிலும் சுறு சுறுப்பு ஏற்பட்டிருக்கிறது. கிழக்கு மேற்குப் போர்முனைகள் ஒன்றுபடுவது வெகு தூரத்திலில்லை.

**வீண் பித்தல்.** ஹிட்லர் இப்பொழுதும், "பெர்லின் ஜெர்மனி வசமிருந்து வருகிறது. வியன்னா மறுபடியும் ஜெர்மன் வசமாகி விடும். ஐரோப்பா ஒருபொழுதும் ருஷ்ய வசமாகிவிடாது" என்று கூச்சலிடுகிறான்.

அது எப்படி சாத்யமாகும்? எல்லா பக்கங்களிலிருந்தும் ஜெர்மனியின் தலைநகரை நோக்கி ஏராளமான நேசதேசப்படைகள் முன்னேறி ஜெர்மன் சேனைகளைச் சிதற அடித்து விட்டன. நாஸிகள் மூன்று பகுதிகளில் தாக்கலாம். தெற்கில் கெஸ்ஸல்ரிங்கும், வடக்கில் புஷ்ஷுமும், மத்தியில் ஷோர்னரும் நேசதேச முயற்சியை எதிர்த்துப் போராடலாம். ஆகிலும் ஜெர்மனியின் விதியைத் தவிர்க்க முடியுமா?

ஜெர்மன் சேனை பூராவாக முறியடிக்கப்படும் வரையிலும் ஜெர்மனி பூராவாக ஆக்கிரமிக்கப்படும் வரையிலும், அதாவது ஜெர்மனி, வடக்கு இதாலி, நார்வே, பிரான்ஸ் முதலிய இடங்களிலுள்ள ஜெர்மன் எதிர்ப்பு குலைந்துவிடும் வரையிலும் வெற்றி தினம் கிடையாதென்று ஜெனரல் ஈசன்ஹவர் ஒலிபெருக்கியிருக்கிறார்.

வி வி வி வி வி

**யுத்தப் போக்கு.** நேசதேசப்படைகள் எல்பே நதிக்கு வந்துவிட்டன. பெர்லினுக்கு முன் இதுதான் இயற்கையான இடையூறு. பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரியிடமுள்ள 21-வது சேனை ஹாலந்தை விடுவித்து டென்மார்க்கையும் வடக்குக் கடலிலுள்ள ஜெர்மன் துறைமுகங்களையும் துணிக்க முயன்று வருகிறது. ஜெனரல் க்ரேரரின் கனடியப் படை ஹாலந்து வழியாக ஜெர்மனிக்கு முன்னேறி வருகிறது. ஜெனரல் டெம்ப்ஸியின் இரண்டாவது சேனை பிரேமன் ஹாம்பர்க்கை நோக்கி முன்னேறி வருகிறது. மத்தியில் ஜெனரல் பிராட்லியின் 12-வது சேனை (இருமிலியன் ஸோல்ஜர்கள் உள்ளது) பெர்லினை நோக்கி வருகிறது. அமெரிக்க 9-வது சேனை எஸ்ஸன், டூயிஸ்பர்க், ஹனோவர், பிரன்ஸ்விக் முதலியவற்றைப் பிடித்தது. எல்பே நதியை மாக்டெபர்க்குக்கருகில் தாண்டிவிட்டது. அதற்குத் தெற்கில் ஜெனரல் ஹாட்ஜாஸின் 1-வது சேனை மலைகளைத் தாண்டிச் சென்று ஹாலி, லிப்ஸிக்கை நோக்கி முன்னேறி வருகிறது. ஜெனரல் பாட்டனின் மூன்றாவது சேனை செம்னிட்ஸ், டிரெஸ்டனை நோக்கி முன்னேறுகிறது. வலது பக்கக் கோடியில் அமெரிக்க 7-வது சேனையும் பிரெஞ்சு 1-வது சேனையும் ஹெயில்பிரானையும் பாடனையும் பிடித்தபின் நூரம்பர்க்கையும் ஸ்டட்கார்டையும் நோக்கி முன்னேறுகிறது.

ருஷ்யப் போர்முனையில் ருஷ்யப் படைகள் வியன்னாவைத் தாண்டி முன்னேறி, ஜெர்மன் தலைநகரத்தைத் தாக்க படைகளைக் குவித்து வருகின்றன.

வி வி வி வி வி

**இதாலியப் போர்முனையில்** மறுபடியும் சுறுசுறுப்பு ஏற்பட்டுவிட்டது. 8-வது சேனை போ நதியின் அநேக கிளைகளைத் தாண்டி போலோனாவை நோக்கி முன்னேறுகிறது. 5-வது சேனை ஸ்பீஸியா என்ற கடற்படை தளத்தை நோக்கி முன்னேறுகின்றது.

வி வி வி வி வி

**ஒகினுவாப் போர்,** ரெயூகுயூஸில் ஒகினுவாவில் போர் வலுவாக நடைபெறுகிறது. தீவு இரண்டாகத் துணிக்கப்பட்டபோதிலும் வடக்குப் பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் தலைநகரமான நாகாவைத் தற்காப்பு செய்யும் ஜப்பானிய ஸீக்பிரட் அரண் ஓரமாகவும் கடும் போர் நடைபெறுகிறது. ஜப்பானியர்கள், கடற்தளபதி நிமிட்ஸ் சொல்லுவதுபோல, ஒகினுவாவிலுள்ள நேசதேச கடற்படைகளை விமானங்களால் தாக்கி அபாரமான நஷ்டமடைந்தார்கள். ஆனால் கடற்படைக்கு சேதம் ஒன்றுமில்லை.

வி வி வி வி வி

**பிலிப்பைன்ஸில்** மிண்டானோவின் விடுதலை பூர்த்தியாகிவிட்டது. மற்ற இடங்களில் துடைப்பு வேலை நடைபெறுகிறது.

வி வி வி வி வி

**பர்மா.** மாண்டலேக்குத் தெற்கில் முக்கோண பிரதேசத்திற்கான போர் முடிவுக்கு வந்துவிடும். ஷான் நாடுகளை நோக்கி முன்னேறிய பிரிடிஷ் 14-வது சேனை தாஜி, ஹிலெயிஸ்க்டாட், கியாக்பாடாங் முதலியவற்றைப்பிடித்தது.

**ஸ்பெயின்.**

பிலிப்பைன்ஸில் ஸ்பானியர்டுகளை அக்கிரமமாக நடத்தியதற்காக ஜப்பானுடன் கொண்டிருந்த உறவை ஸ்பெயின் ரத்து செய்துவிட்டது. மாட்ரிட்டில் சொல்லப்படுவதுபோல் 162 ஸ்பானியர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மணிலாவில்மட்டும் ஸ்பானியர்டுகளின் சொத்து 30 சதவிகிதம் அழிக்கப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**சாம்ராஜ்ய நாடுகளின் யுத்த உயிர்ச் சேதம்.**

இந்த யுத்தத்தில் சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்தவர்களில் 3,07,974 பேர்கள் உயிர்துறந்தார்கள். 4,22,148 பேர்களுக்குக் காயம்பட்டது. சென்ற யுத்தத்தில் 9,46,023 பேர்கள் கொல்லப்பட்டார்கள். 2,12,906 காயம்பட்டவர்கள். இந்த யுத்தம் $1\frac{1}{2}$-வருஷம் அதிகமாக நடைபெற்ற பின்னும் குறைவான நஷ்டம்தான் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் நேசதேசத்தாரின் யுத்த தந்திரம்தான். முன்கூடியே நேசதேசத்தார்கள் எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களையும் யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளையும் வெடிகுண்டுகளாலும் பீரங்கிகளாலும் நொருக்கிவிடுகிறார்கள். அதன்மூலம் படையெடுப்பு ஏற்படும்பொழுதும் தற்காப்புச் செய்வதற்கும் முன்னேறித் தாக்குவதற்கும் எதிரி சக்தியை இழந்துவிடுகிறான். அதாவது கவசம்பூண்ட ஆயுத உபயோகத்தினால் போர்முனையிலுள்ள படைகளுக்கு உயிர்ச் சேதம் குறைந்துவிட்டது. அதற்கு பதிலாக வெடிகுண்டு வீச்சுக்குட்பட்ட நாடுகளில் பொதுமக்கள் ஏராளமாக உயிரை இழந்திருக்கிறார்கள்.

---

# ஒவ்வொரு வீட்டிலும் வெள்ளைக்கொடிகள்.

## *ஜெர்மன் கிராமத்தின் தோற்றம்.*

**வின்ஸெண்ட் வாகன் தாமஸ்.**

*பிரிடிஷ் இரண்டாவது சேனை ஆக்கிரமித்த ஒரு ஜெர்மன் கிராமத்தைப்பற்றி B. B. C. நிருபரான வின்ஸெண்ட் வாகன் தாமஸ் விவரித்திருக்கிறார்.*

ஒவ்வொரு வீட்டிலும் ஜெர்மனியின் மகத்தான கொடிகள் கட்டப்பட தெருக்களின் ஒளிப்படங்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களல்லவா? இப்பொழுதும் அதே காக்ஷிதான். ஆனால் இப்பொழுது அந்தக் கொடிகள் காணப்படவில்லை. இப்பொழுது சரணாகதி செய்வதற்கான வெள்ளைக்கொடிகள் காணப்படுகின்றன.

இந்த சிறிய கிராமத்தின் எஜமானர்கள் நாங்கள்தான் என்று நினைத்தோம். நாங்கள் ஒரு உத்தரவு போட்டால் உடனே அதன்படி நடந்தேரும். ஏனெனில் ஒருவரும் வெளியே வருவதில்லை. ஆகிலும் கிராமத்தில் சரணாகதிக்கான அடையாளங்கள் காணப்படும்.

அதன் ஒரு வீட்டின் கதவு திறக்கப்பட்டது. நடுத்தரமான வயதுள்ள ஒரு ஸ்திரீ எட்டிப்பார்த்தாள். நாங்களும் உற்று நோக்கினோம். அவள் எங்களுக்கு மரியாதை செய்தாள். அதன்பின் ஒவ்வொருவராக ஜனங்கள் வீட்டைவிட்டுவந்து தெருவுக்கு வந்தார்கள்.

ஒரு வயது முதிர்ந்தவர் ஆங்கிலத்தில் "வந்தனம்" என்றான். மற்றொரு ஸ்திரீ சற்றுச் சிரித்துவிட்டு அதை பிறகு அடக்கிக்கொண்டாள்.

அவர்களிடம் எங்களுக்கு ஒன்றும் சொல்லுவதற்கில்லையாதலால் நாங்கள் கடந்து சென்றோம். எங்கள்முன் ஒரு முட்டுக்கட்டை இருந்தது. நாங்கள் ஆறுவருடங்களாகப் போரை நடத்தியிருக்கிறோம். மற்ற நாடுகளில் ஜெர்மானியர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை நினைத்தால் ஒன்றும் செய்ய எங்களுக்கு மனம் வரவில்லை.

மேலும் இந்த ஜனங்கள் எங்களுடைய அன்பைப் பெறமுடியாதபடி கிராமியமானவர்கள். அவர்கள் வெளியே வராமல் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிக்கொண்டிருந்தாலே நாங்கள் நிலைமையை நன்கு உணர்ந்திருப்போம். ஏனென்றால் இவ்விதமான சரணாகதி கண்யமுள்ளதல்ல.

நாங்கள் தெருக்கோடிக்கு வந்தோம். நகர மேயர் அங்கு வந்தார். எங்களுடைய பிரகடனங்கள் வாசிக்கப்பட்டன. ஜெனரல் ஐசன்ஹவரின் முதல் பிரகடனம் படிக்கப்பட்டது. "நாங்கள் வெற்றிபெற்று வந்திருக்கிறோம். நாங்கள் உங்களைத் துன்புறுத்த

வரவில்லை'' என்று அதில் எழுதப்பட்டிருக்கிறது. நாஸிகக்ஷி கலைக்கப்பட்டதென்றும் இரவு நடமாட்டத்தடை சட்டம் அமுலுக்குவரும் என்றும் மற்ற பிரகடனங்கள் வெளியிடப்பட்டன.

கிராமவாசிகள் அங்கு கூடினார்கள், பிரகடனங்களை மௌனமாக வாசித்தார்கள். வீட்டுக்குச சென்று கதவுகளை தாளிட்டுக்கொண்டார்கள். கிராமத்தை நாங்கள் ஆக்கிரமித்தோம்.

---

## ஜெர்மனியில் என்ன நடைபெறுகிறது?

(டெயிலி மெயில்).

நாம் பயங்கரமான குழப்பத்திற்குள் முன்னேறி வருகிறோம். இப்பொழுது ஆரம்பமாகியிருக்கிறது ஜெர்மன் சேனையின் வீழ்ச்சி மட்டும் இல்லை. மேற்கு ஐரோப்பாவிலுள்ள பெரிய நகரத்தின் சகலவிதமான வீழ்ச்சியாகும்.

ஜெர்மன் சேனை வீழ்ச்சிபெற்றால் மற்றெல்லாம் வீழ்ச்சி பெற்றுவிட்டதென்று பொருள்படும். அதாவது தேசம் பாழாகி விட்டதென்று புலப்படும். இரண்டு நாட்களாக ஆகாரமில்லாமல் ஒரு பான்ஸர் டிவிஷன் போர் முனைக்கு வருவது போன்ற நிலமையில் சேனைக்கு உணவுப்பொருள் கிடைக்காவிட்டால் மற்ற ஒருவருக்கும் உணவு கிடைக்காது. துருப்புகளுக்குத் தேவையான போக்குவரத்து வாஹனங்களுக்கும் பெட்ரோலும் இல்லாவிட்டால் பொதுமக்களுக்கு ஒன்றும் கிடைக்காது. யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகள் அற்றுப்போய்விட்டால் மற்ற எல்லா தொழிற்சாலைகளும் நின்றுவிடும்.

இந்த குழப்பம் பயங்கரமாக இருக்கும். டியிஸ்பர்க்குக்கு சமீபத்தில் மூன்று வாரங்களாக உணவன்னியில் 7,000 ஜனங்கள் ஒரு குகையில் வசித்து வருகிறார்கள். எங்களுடைய உதவியை நாடி அவர்கள் ஒரு தூதரை அனுப்பினார்கள். இதுபோல் அநேக நடவடிக்கைகள் தொடரும்.

சென்ற மாதத்தில் ஜெர்மனி 50,000 டன்கள் எண்ணெயை உற்பத்தி செய்தது. சமாதான காலத்தில் ஜெர்மனி உண்டு பண்ணின எண்ணெய் அளவில் இது பத்தில் ஒரு பங்காகும்.

ரெயில்வண்டிகள் வேலை செய்யவில்லை. அவைகள் நிலக்கரியைக்கூட எடுத்துச் செல்லக் கூடவில்லை

கிழக்கு பிரஷ்யாவிலிருந்து வெளிவந்தது போல் பிராங்க்பர்டியிலிருந்தும் ஹானோவரிலிருந்தும் அகதிகள் குழப்பமான நிலையில் வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மனின் அமைப்பு பூராவும் தூளாகிக்கொண்டு வருகிறது. யுத்தம் ஜெர்மனியின் சிதைவில்தான் முடியுமென்று தோன்றுகிறது. நாம் சிதைவுற்ற ஜெர்மனியைத்தான் ஆக்கிரமிக்கப் போகிறோம்.

மேற்கு ஜெர்மனியிலுள்ள ஒரு நகரத்தை ஒரு ஜெர்மன் ரேடியோ வியாக்யானி பின்வருமாறு வர்ணிக்கிறார். ஒரு வீடுகூட கிடையாது. ஜனங்கள் குழிகளிலும் ஒளிகளிலும் வசித்துவருகிறார்கள். கூண்டிலடைப்பட்ட பக்ஷிகளைப் போல் அவர்கள் காணப்படுகிறார்கள். அவர்கள் தரையிலோ அல்லது முகமூடியின் பேரிலோ உட்காருகிறார்கள். அவர்கள் அதிகமாக சம்பாஷணைகளை நடத்துவதில்லை. மேற்குப்போர்முனையிலுள்ள ஒரு ஸோல்ஜரை பேட்டி கண்டேன். ஜெர்மன் பத்திரிகையில் எழுதப்பட்டிருப்பதை டெயிலிமெயில் பத்திரிகையின் விசேஷ நிருபரான ரால்ப் ஹிவீன் பிரசுரித்திருக்கிறார். அது பின்வருமாறு:—

மேற்குப்போர் முனையிலுள்ள துருப்புகளுக்கு அநேக நாட்களில் புதிதான ஆகாரம் கிடைப்பதில்லை. வெடிமருந்துகளும் மற்ற சர்பராக்களும் வெகுநாள் தாமதத்தின் பேரில்தான் கிடைத்துவருகின்றன.

---

## ஐரோப்பிய யுத்தம் முடிவடையும்பொழுது.

### பிரிடனுக்கு அதனால் ஏற்படும் விளைவு.

(டெயிலி டெலகிராப்.)

ஐரோப்பிய யுத்தத்தின் முடிவு பிரிடிஷார்களுக்கு என்ன விளைவைத்தரும் என்பது ந்யூ யார்க் ஹெரால்ட் ட்ரிபூன் பத்திரிக்கையில் அதன் லண்டன் நிருபரான ரிச்சர்ட் விட் மேரால் சர்ச்சை செய்யப்படுகிறது. அவன் சொல்லுகிறான்:—

இந்த யுத்தத்தில் மற்ற எந்த தேசமக்களும் வெகு காலம் இவ்வளவு அசௌகரியங்களை அனுபவித்ததில்லை. போரில் ஈடுபட்ட மற்றெந்த நாடுகளையும்விட வெற்றியைக் கொண்

டாட இங்கிலாந்துக்கு அதிக முகாந்திரங்களுண்டு. மற்ற இடங்களில் தோன்றக்கூடிய கூக்குரலுக்கு ஒப்பிட்டால் இங்கிலாந்தில் நடைபெறப் போகும் கொண்டாட்டங்கள் மித மாகத்தானிருக்கும். இது இங்கிலீஷ் மக்களின் இயற்கையான அமைதியான குணத்தினுல் மட்டுமில்லை.

முடிவு திடீரென்று ஏற்பட்டால் தெருக்களில் சங்கீதமும் சிறிப்பும் வியப்பும் காணப் படலாம். கொண்டாட்டத்தை சிறிப்புடன் நடத்த இங்கிலாந்தில் ஒன்றுமில்லை. கஷ்ட நிவாரணம் ஆகிவிட்டதென்ற உணர்ச்சி பலமாகவும் மிதமாகவும் இருக்கும். ஏனென்ருல், இங்கிலாந்து ஐந்து வருஷகாலமாக போரை நடத்திருக்கிறது, படையெடுப்பு பீதிக்குட்பட்டி ருக்கிறது. அதன் பொதுமக்களுக்கு தொடர்ச்சியாக உயிர்ச்சேதம் ஏற்பட்டது. போர் முனையிலுள்ள வீரர்களின் கஷ்டங்களையும் அது அனுபவித்து வந்தது. வெடிகுண்டு வீச்சு நின்று போய்விட்டால் சிலர் பாதிக்கப்படுவார்கள். மற்றவர்கள் தங்களுக்கு மறுபடியும் சொந்தமான வாசஸ்தலம் கிடைக்குமென்று ஆசை கொள்வார்கள்.

சுமாராக 10 மிலியன் ஆடவர்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும் மற்ற குடும்பங் களுடன் வாழ்ந்து வருகிருர்கள் என்று விட்மர் சொல்லுகிருர். பிரிடனில் உணவுப் பொருள்களும் எவ்விதம் பங்கிடு செய்யப்படுகின்றன என்பதைப்பற்றியும் அவர் அமெரிக்கர் களுக்கு எடுத்துரைத்தார்.

பிரிடிஷ் மக்கள் ஒருபொழுதும் பட்டினி கிடக்கவில்லை. அல்லது போதுமான உடை களுமில்லாமலில்லை. ஐந்தரை வருடங்களுக்குப்பின் உணவுப்பொருளில் அருவருப்பு ஏற்பட்டு விட்டது. ஆடைகள் கிழிந்துபோய் விட்டன. 1941-ம் வருஷம் முதல் பிரிடிஷ் மக்கள் தங்களுடைய ஆடைகளைப் புதுப்பித்துக் கொள்ளவில்லை. யுத்தம் முடிந்து ஆடைகள் வரும் வரையில் அவர்கள் பழைய துணிகளை உபயோகித்து வருவார்கள். தங்களுடைய வீடுகளி லேயே கஷ்ட நிஷ்டுரங்களையும் கொடுமைகளையும் அனுபவித்து ஐந்தரை வருஷ காலம் கழித்து வந்தவர்களுக்கு நம்முடைய பாராட்டும் விசுவாசமும் உரித்ததாகும்.

---

## நாஸிதத்வத்தின் மரண்டை.

### ஹிட்லர் என்ன செய்வான்.

(டெயிலி மெயில் பத்திரிகையின் ராணுவதந்திர நிருபர்.)

(வில்ஸன் ப்ராட்பெண்ட்.)

ஹிட்லருக்குக் கோரமான முடிவு ஏற்படப் போவதாலும் ராஜீய ஆடம்பரமும் ராணுவப் புகழும் பெறலாம் என்ற கனவுகளும் மறைந்து வருவதாலும் ஹிட்லர் என்ன செய் வான். அவன் போரை நடத்துவானு அல்லது தப்பிப் பிழைக்க ஓடுவானு? எதிர்பார்த்த படி நடைபெருவிடில் அவன் உயிரை மாய்த்துக்கொள்ளுவான் என்று அவனுடன் நெருங்கிய வர்கள் சந்தேகிப்பதுபோல் அவன் இறந்துபோவானு அல்லது நேசதேசவசமாகி, நாஸிதத் வத்துக்காக உயிரைத்தியாகம் செய்தோம் என்ற புகழ் பெற்று நாஸிகளின் குரூரமான கொள்கைகளை ஸ்தாபிக்க அவன் முயலுவானு?

அவனுடைய திட சித்தத்தைப்பற்றி அவன் எப்பொழுதும் பீத்திக்கொள்வது வழக்கம். மற்றவர்களும் அவ்விதமாக தைரியமாக இருக்க வேண்டுமென்று அவன் சொல்லி வந்தான். தைரியமாக இருக்கவேண்டுமென்பதுதான் அவனுடைய கோட்பாடு. அவனைப்போன்ற வர்களிடம் இவ்விதமாக தைரியம் காணப்படுவது விந்தையில்லை. இப்பொழுது அவனுடைய திடசித்தத்துக்கு பரிக்ஷா காலம் வந்து விட்டது. நாஸி சாம்ராஜ்யத்தை அபிவிருத்தி செய்து அது 1,000 வருஷங்கள்வரை நீடித்து நிற்கும் என்று எதிர்பார்த்தது போக அந்த சாம்ராஜ்யம் நொருங்கிவிட்டது. அவனுடைய எண்ணங்களை நிறைவேற்ற அவன் தாராள மாக உபயோகித்து வந்த பிரஷ்ய பலமும் நொருங்கிவிட்டது.

பீல்ட் மார்ஷல் வான்ரூண்ட்ஸ்டெட்டுக்குப் பதிலாக கெஸ்ஸல்ரிங்கை நியமித்ததற்கு சென்ற சில நாட்களில் நடைபெற்ற ராணுவ நடவடிக்கைகள்தான் காரணமென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஹூடன்டார்பைப்போல் வான் ரூண்ட்ஸ்டெட்டும் ஹிட்லருக்கு பாதகமாக நடந்து கொண்டானென்பது நிச்சயம். நேசதேசத்தார்களை ராணுவ முறையில் எதிர்த்துப் போராடுவது பயனற்றதென்றும் அவன் ஹிட்லரிடம் சொல்லியிருக்கிருன். இதற்குப் பிறகு தான் வான் ரூண்ட்ஸ்டெட்டை இனிமேல் நம்பக்கூடாதென்று நாஸிகள் உணர்ந்தார்கள். எந்த நேரத்திலும் ரத்த வெள்ளமில்லாமலும் பிரஷ்யாவின் கௌரவத்திற்கு ஹானியளிக் கக்கூடிய பூர்ணமாக தோல்வியை தவிர்க்கவும் அவன் சரணகதி செய்திருப்பான். ஆனுல் நாஸிகள் அவரைக் காவலில் வைத்துவிட்டார்கள்.

அதன்பின் நாஸிகள் இதாலியில் பின்வாங்கும் முறையில் போர் புரிந்து வந்த கெஸ்ஸல்ரிங்கை வரவழைத்தார்கள். கெஸ்ஸல்ரிங் சரணடைய மாட்டான் என்று மதிக்கப்பட்டது. கூடுமான வரையில் பின்வாங்க வேண்டுமென்றும் அந்த காலத்திற்குள் ஹிட்லரும் அவனுடைய விசுவாசமுள்ள பரிவாரங்களும் உள்நாட்டு கோட்டைகளுக்குள் ஓடிவிடலா மென்றும் அவர்கள் நினைத்திருக்கிறார்கள். போரை நடத்தவேண்டும். ஹிட்லரும், ஹிம்லரும் கோயபல்ஸூம், கோயரிங்கும், ரிப்பன் டிராப்பும் போரை நடத்த உத்தேசித்தால் தான் போர் நடைபெறும்.

நாஸிகளுக்கு இது பரிக்ஷாகாலம். ஹிட்லர் இவ்வளவு பலமாக போதித்து வந்திருக்கும் திடசித்தத்தின் வலிமை எவ்வளவு என்று இப்பொழுது நாம் பார்த்துவிடலாம். அநேகர்கள் நாஸிகள் தேகவலுவைத்தான் நம்பியுள்ளவர்களே அல்லாது மனோதிடத்தை நம்பியவர்களல்ல என்று சொல்லுகிறார்கள். ஜெர்மன் சேனைகள் குழப்பமான நிலைமையில் இருந்து கொண்டும், அவர்களின் ராணுவப்புகழ் மறைந்து கொண்டும், ஜெர்மன் ரகஸியப் போலீஸின் குறைவலைப்பிடிப்பு தளர்ச்சி பெற்றுக்கொண்டும் இருக்கும் சமயத்தில், அவனுக்கு பலமான ராணுவத் தோல்விகள் கிடைத்தபின்னும் ஹிட்லர் அவனுடைய ராஜிய அதிர்ஷ்டங்களை எவ்விதம் பலப்படுத்த உத்தேசித்திருக்கிறான் என்பதை நாம் கவனிப்போம்.

---

## ரூர்—ஜெர்மன் தொழிற்சாலைகளின் மர்ம ஸ்தலம்.

(J. K. நோவாக்.)

நேசதேசப்படைகள் ஐரோப்பாவில் இறங்குவதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன் 1942-ம் வருஷத்தில் ட்யூசே, ஆல்கமின் சிடங் என்னும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "ரூரின் விதிதான் ஜெர்மனியின் விதியை நிர்ணயிக்கும்". இது உண்மைதான். தென் மடலில் 15 மைல்களும், கிழமேலில் 40 மைல்களும் உள்ள இந்தப் பிரதேசம் நன்றாக அமைக்கப்பட்டுள்ளது. அதில் 35,00,000 ஜனங்கள் வசித்துவருகிறார்கள். வடக்கு ஸைலீஷியாவை ஜெர்மனி இழந்தபின் அதற்குத் தேவையான எல்லா தளவாடங்களையும் அது வழங்கிவந்தது.

எஸ்ஸனைச் சுற்றியுள்ள மத்திய அரங்கம் ஐரோப்பாவிலேயே மிகுதியான நிலக்கரியைப் பெற்ற மாகாணம். கணக்குகள் கிடைத்துள்ள 1938-ம் வருஷத்தில் 127 மிலியன் மெட்ரிக் டன்கள் கொண்ட நிலக்கரி எடுக்கப்பட்டது. அதாவது ஜெர்மனியின் நிலக்கரி உற்பத்தியில் 68 சத விகிதம் என்று சொல்லலாம். எஃகு உற்பத்திக்கு அவசியமான 3,36,00,000 மெட்ரிக் டன்கள் கொண்ட கோக்கும் இங்கு உற்பத்தியாகிறது. இது ஜெர்மனியின் உற்பத்தி அளவில் 70 சத விகிதமுள்ளது.

கோக், நிலக்கரி உள்ள இந்தப் பிரதேசங்களைச் சுற்றி கிரப்ஸிலுள்ள பெரிய எஃகு, யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் 13,000 டன்கள் இரும்புக் கட்டியையும் 16 மிலியன் டன்கள் எஃகையும் உற்பத்தி செய்தன. அதாவது ஜெர்மனியின் உற்பத்தியில் 72, 70 சத விகிதம் என்று சொல்லவேண்டும்.

யுத்த ஆரம்பத்திலிருந்து இந்த உற்பத்தி அளவைக் குறைக்க பிரிடன் கூடுமானவரையில் முயற்சி செய்துவந்தது. பிரிடிஷ் கடற்படை முற்றுகை போட்டதினால கடல்தாண்டி ஜெர்மனிக்கு எண்ணெய் வரக்கூடவில்லை. ஆகையினால், ரூரிலுள்ள நிலக்கரியின் ஏராளமான பாகங்கள், டாங்கிகள், விமானங்கள், பீரங்கிகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதிலிருந்து சேர்மான எண்ணெயை உற்பத்தி செய்வதில் உபயோகப்படுத்தப்பட்டது. அரங்கங்களில் வேலை செய்ய 50,000 பேர்கள் தேவைப்பட்டது. ஆகையால் சேவைப் படைகளுக்கும் ஆயுத உற்பத்திசாலைகளுக்கும் ஆள் பலம் குறைவுபட்டது.

ஜெர்மனிக்கு கலப்படைகளும் வராமல் பிரிடிஷ் கடற்படை தடுத்துவந்ததால் ரூரில் உற்பத்தி செய்யப்பட்ட எஃகின் தரமும் குறைந்துவிட்டது. 1938-ம் வருஷத்தில் டாங்கிகள், பீரங்கிகள், யந்திர ஆயுதங்கள் முதலியவற்றின் உற்பத்திக்குத் தேவையான 2,20,000 டன்கள் கலப்படை சாமான்களை ஜெர்மனி வருத்திவந்தது, பிரிடிஷ் கடற்படை இதில் 83 சத விகிதம் ஜெர்மனிக்குக் கிடைக்காதபடி தடை செய்துவந்தது.

முற்றுகையின் காரணமாக ஜெர்மனி நிக்கலில் 80 சத விகிதத்தையும், குரோமியத்தில் 53 சத விகிதத்தையும், மாலிப்டனத்தில் 85 சத விகிதத்தையும், டங்க்ஸ்டனில் 75 சத விகிதத்தையும் இழந்தது. 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் 3-ம் தேதியன்று நார்வேயில் நாபனிலுள்ள மாலிப்டனச் சுரங்கங்களைத் தாக்கியதின் மூலம் அந்த தாதுப்பொருளின் ஸப்ளை பின்னும் 20 சத விகிதம் குறைந்துவிட்டது.

பிரிடிஷ் வெடி விமானங்களின் வேலையை நாம் அதிகப்படுத்திச் சொல்லமுடியாது. தொழிற்சாலை ஸ்தாபனங்களை அழிப்பதற்கு 2,20,000 ராத்தல்கள் எடையுள்ள விசேஷமான வெடி குண்டுகளை அகில பிரிடன்தான் முதலில் உற்பத்தி செய்தது. இன்னும் உற்பத்தி செய்துகொண்டுமிருக்கிறது. அந்த கனமான வெடிகுண்டுகளை ஏற்றிச்செல்லப் போதுமான சக்தியுள்ள விமானங்கள் தேவையென்பதும் சொல்லத் தேவையில்லை.

ரூர் பிரதேசத்தைத் தாக்கும் மகத்தான தாக்குதல் 1943-ம் வருஷம் வசந்த காலத்தில் ஆரம்பமாகிற்று. நான்கு மாதங்களில் 50,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள குண்டுகள் போடப்பட்டன. அதனால் ரூரின் உற்பத்தி 35 சதவிகிதம் குறைந்துவிட்டது. கிரப்ஸ் தொழிற்சாலையைப் பழுதுபார்ப்பதற்கு மட்டும் 20 மிலியன் தொழிலாளர்கள் ஒரு மாத காலம் வேலை செய்தார்கள். ரூர் பிரதேசத்தில் விமான எதிர்ப்பு பீரங்கிகளை அமைப்பதில் 2 மிலியன் ஜனங்கள் ஈடுபட்டிருந்தார்கள். இதனால் யுத்த தளவாட உற்பத்தி மிகவும் குறைவுபட்டது.

ரூர் பிரதேசத்தில் தொழிற்சாலைகள் மிகுதியாக இருந்த சில நகரங்களை இங்கு குறிப்பிடுவோம். கிளாட்பாக், எஸ்ஸன், ஹாம்பார்க், கிரெபெல்ட், லெவர்குஸன், சோலிங்கன், டஸ்ஸல்டார்ப் முதலிய நகர்ங்கள் பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதல் லக்ஷியங்களாக இருந்தன. ஜெர்மனியின் சாமான் போக்குவரத்துகளில் 25 சதவிகிதம் எஸ்ஸன் வழியாகச் சென்றது. சாமான்களின் போக்குவரத்துக்கு டூயிஸ்பர்க்தான் உள்நாட்டிலுள்ள பெரிய துறைமுகம். ரூரின் நெசவு ஆலைகள் இருந்த வப்பர்தாலில் எலிகள் அதிகமாக வசித்து வந்தன. எலிகள் தொழிற்சாலை பாழ்களிலிருந்து வெளிவந்து நகரம் பூராவிலும் பரவி விட்டதால் அங்கு ஜனங்கள் வசிக்கவில்லை.

---

## நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களைத் திருப்பி அனுப்புவது.

### நேசதேச ஏற்பாடுகள்.

(டெயிலிடெலகிராப் பத்திரிகையின் பாரிஸ் நிருபரான ஜார்ஜ் பைப்).

மேற்குப் போர் முனையிலுள்ள நேசதேசத்தார்முன் மகத்தான பிரச்னை தோன்றியிருக்கிறது. உத்தியோக முறையில் கிடைத்த தகவல்களிலிருந்து பிரிடிஷாரும் அமெரிக்கத் துருப்புகளும் ஆக்கிரமிக்கக்கூடிய ஜெர்மன் பிராந்தியங்களிலுள்ள 20,000,000 பொதுமக்கள் தங்களுடைய நாடுகளை விட்டு வந்தவர்களாகவும் அல்லது பிணியாளிகளாகவும் இருந்துவருகிறார்கள் என்றும் அவர்களை சொந்த நாடுகளுக்கு அனுப்புமுன் அவர்களைப் பாகுபாடுசெய்ய வேண்டுமென்றும் தெரியவருகிறது.

மேற்கிலிருந்து நாம் துரிதமாக முன்னேறி வருகிறோம். கிழக்கிலிருந்து ருஷ்யாவும் பலமாகத் தாக்கிவருகிறது. ஆகையால் முதல்தரமான முக்கியத்வமுள்ள ஒரு நிலமை திடீரென்று ஏற்பட்டுவிட்டது. அதை நாம் தினப்படி தீர்த்து விடாவிட்டால் குழப்பம் நேரிட்டுவிடும். ஜெர்மனியின் யுத்த சொக்கட்டான் விளையாட்டில் சக்தியற்ற காய்கள் போன்ற பொதுமக்களை நாம் அடக்கியாண்டு அவர்களுக்கு ஆகாரம் அளிக்கவேண்டும், இடவசதி செய்து கொடுக்கவேண்டும், வைத்திய வசதியளிக்கவேண்டும். இந்த உதவி அவர்கள் தாயகம் திரும்பும் வரையில் வழங்கப்படவேண்டும். அது ஆரம்பமாகும்பொழுது சரித்திரத்திலேயே மகத்தானதாக இருக்கும். அதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். ஏற்பாட்டின் உபயோகம் நன்கு பரிசீலனை செய்யப்படும்.

நிலமை பின்வருமாறு:— நாடுகளைவிட்டு வெளியேறி வந்திருப்பவர்கள் 4 500,000 பேர்கள். அவர்கள் பல நாடுகளிலிருந்து எதிரிக்கு அடிமை வேலைசெய்ய திரட்டப்பட்டவர்கள். அவர்கள் இப்பொழுது பிரிடனும், அமெரிக்காவும் ஆக்ஷி செய்யப்போகும் பிரதேசத்தில் வசித்து வருகிறார்கள். அந்த பிராந்தியத்தில் 15 மிலியன் ஜெர்மன் அகதிகளும் இருந்து வருகிறார்கள். ஜெர்மானியர் கைது செய்த நேசதேசத்தவர்களில் 1,000,000 பேர்களும் அங்கு இருந்து வருகிறார்கள்.

எப்பாடுபட்டும் இந்த மகத்தான படைகள் அடக்கியாளப்படவேண்டும். ஜெர்மன் அகதிகள் சம்பந்தப்பட்டமட்டில் நாம் ராணுவ பத்திரத்தை ஒட்டி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம். ஆனால் மற்ற 4,500,000 ஜனங்கள் சம்பந்தமாக நமக்குப்பொறுப்பு அதிகமானது. அதில் உண்டாகும் சிரமங்கள் எதிர்பார்த்தவைகள்தான். ஏற்கனவே நமக்கு சிறந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. ஆகிலும் பிராங்க்பர்ட்டைக் கைப்பற்றியபின் உண்மைகள் நமக்கு அதிகமாக புலப்படுகின்றன.

கொலோனில் ஜெர்மானியர்கள் எல்லோரையும் அப்புறப்படுத்தி விட்டார்கள். பிராங்க்பார்டில் 1 லக்ஷம் அயல்நாட்டு வேலைக்காரர்கள் இருந்து வருகிறார்கள். பிடிபட்ட நகரத்திலுள்ள ஒவ்வொருவரையும் பதிவு செய்வதுதான் முதல் வேலை. நாட்டைவிட்டு ஓடி வந்தவர்களின் நல்லெண்ணம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னும் எதிரியின் ஏஜண்டுகள் விலக்கப்பட்ட பின்னும் சுதந்திரம் அளிக்கப்படுவார்கள். எதிரியைச் சேர்ந்தவர்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் பாராட்டப்படும். அவர்களை ஜெர்மானியர்களுடன் வசிக்கும்படி ஒப்படைக்கமாட்டோம். அவசியமானால் அவர்களுக்கு வசிக்கும் இடம் கொடுப்பதற்காக ஜெர்மானியர்கள் அவர்களுடைய விடுதிகளைக் காலி செய்யவேண்டியிருக்கும்.

---

# X. Y. Z.-ன் நடவடிக்கை.

## நேசதேசத்தாரின் சர்ப்பரா திட்டம்.

(மான்டேன் லேஸி).

X. Y. Z.-ன் நடவடிக்கை என்பது சில வாரங்களுக்கு முன் தயாரிக்கப்பட்ட சிறந்த திட்டம். அதைப் பொறுத்துத் தான் மேற்கில் வெற்றி துரிதமாகக் கிடைக்கும்.

இப்பொழுது அந்த திட்டம் நன்கு வேலைசெய்து வருகிறது. இதன் மூலம் ஜெர்மனிக்குள் நேசதேசப்படைகள் வெற்றிகரமாகச் சென்றுவிடுமென்றும் ஜெனரல் ஈசன்ஹவர் சொல்லுகிறார்.

X. Y. Z. என்பது ரைன் நதி தாண்டியுள்ள நமது சேனைகளுக்கு சர்ப்பராக்களை அனுப்ப அமைக்கப்பட்ட திட்டம். இதை ஆயிரக்கணக்கான லாரிகளும், போக்குவரத்துப் படையும், ரேடியோவும், டெலிபோனும், ராணுவ போலீஸ் படையும் நிறைவேற்றிவருகின்றன.

இப்பொழுது போதுமான சர்ப்பராக்களில்லாமல் நம்மிடமுள்ள எந்தப் படையும் இல்லை; இனிமேலும் ஒன்றுக்கும் சர்ப்பராக் குறைவு ஏற்படாது என்று பிரிகேடியர் ஜெனரல் ஜார்ஜ் ஸ்டுவர்ட் சொன்னார்.

இந்த திட்டம் மூன்று முறையுள்ளது. X முறையில் ஒரு நாளைக்கு 16,000 டன்கள் வீதம் கொடுக்கப்படுகிறது. Y முறையில் தினசரி 10,000 அல்லது 20,000 டன்களும், Z முறையில் 12,000 அல்லது 24,000 டன்களும் கொடுக்கப்படுகிறது. இந்த விவரங்களில் ஸப்ளை செய்யப்படும் பெட்ரோலும், எண்ணெயும் சேர்க்கப்படவில்லை.

ரைன் நதியைத் தாண்டியபின் எல்லா ரயில் வண்டிகளும் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஒரு டிவிஷனுக்கு ஒரு நாளைக்கு 400 டன்கள் சர்ப்பராத் தேவை. அவைகள் ரைன் நதியின் பேரில் பாலம் இல்லாத நிலைமையில் ஜெர்மனிக்குள்ளிருக்கும் படைகளுக்குக் கொண்டுபோகப்பட வேண்டும்.

எல்லாம் X. Y. Z.-ஐ ஏன் பொருத்தியிருக்கிறதென்பது நன்கு விளங்கும். ரைன் நதியைப் படைகள் தாண்டியபொழுது எல்லா கம்பெனிகளும் வாகன்களை அனுப்பவேண்டுமென்ற செய்தி டெலி டைப் மெஷின்களுக்குத் தயாரித்து அனுப்பப்பட்டது. 24 மணி நேரத்திற்குள் போக்குவரத்து அமைப்பின் தலைவரான மேஜர் ஜெனரல் பிராங்க் S. ராஸ் ஏராளமான வாகன்களை ஜெர்மனிக்குள் கொண்டுபோய்விட்டார். நார்மண்டியில் ஸெயிண்ட்லோவிற்குள் படைகள் நுழைந்தபொழுதும் இவ்விதம் நடைபெற்றது.

இப்பொழுது X. Y. Z. ரஸ்தா ஜெர்மனிக்குள் 100 மைல்களுக்குள் செல்லுகிறது. அதை ஒட்டி காவல் முகாம்களும், நடமாடும் ரோந்துப் படைகளும், பழுதுபார்க்கும் படைகளும், பழுது பார்க்கும் சாலைகளும் இருக்கின்றன. $2\frac{1}{2}$ டன் கனமுள்ள வண்டியை உபயோகிப்பதற்கு பதிலாக நாம் இப்பொழுது இரண்டு தொத்து வண்டியை இழுத்துச் செல்லும் டிராக்டரை உபயோகித்து வருகிறோம். அவைகள் சாமான் நிறப்பிய இரண்டு வண்டிகளை போர்முனைக்கு இழுத்துச் சென்று, அதை அங்கு தள்ளிவிட்டு, காலி வண்டிகளை இழுத்துக்கொண்டு திரும்பி வருகின்றன. அதாவது ரஸ்தாவிலுள்ள எந்த யந்திரமும் ஒரு கணம்கூட சும்மாவிருக்கவில்லை. தேவைகளை அவசரமாகக் கொண்டுபோக வேண்டியிருந்தாலும் டிரைவர்கள் மணிக்கு 25 மைல்களுக்கு மேல் வண்டியை ஓட்டக்கூடாது. இவ்விதமாக நிகுதியான வேகத்தில் செல்லுவது நல்ல பலனைத் தருகிறதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த திட்டத்தை நிறைவேற்ற ரஸ்தா போக்குவரத்துப் படை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பாவில் இறக்கப்படும் சாமான்களைப்பற்றி ஜெனரல் ராஸுக்குத் தகவல்கள் கிடைக்கும். அவர் பின்வருமாறு சொன்னார். "சென்ற 24 மணி நேரத்திற்குள் நாங்கள் இருப்புப் பாதைகள் மூலம் 78,000 டன்கள் கொண்ட சாமான்களை அப்புறப்படுத்தியிருக் கிறோம். இது 12 கப்பல்களில் கொண்டுபோகும் சாமானுக்கு சமமானது. தினசரி நாங்கள் 70,000 டன்கள் சாமான்களை இறக்குகிறோம். ரைன் நதியைத் தாண்டிய ஏழாவது நாளன்று நாங்கள் முன்னணி தளங்களுக்கு 12,000 டன்கள் சாமான்களை தினசரி அனுப்பி வந்தோம். டிரைவர்களுக்கு இது கஷ்டமான வேலைதான். அபாயம் பொருந்தியதுதான். முன்னேறும் சேனைகளுக்கு சர்ப்பராக் குறைவில்லாமல் செய்வது X. Y. Z. அமைப்புதான்.

ரைன் நதிக்கு இரு பக்கத்திலுமுள்ள நமது ஆயிரக்கணக்கான விமானங்கள் ஜெர்மன் தற்காப்புகளை தூளாக்கிவிடுமென்று S. H. A. E. F.-லிருந்து சொல்லப்பட்டிருக்கிறது. தின சரி 2,000 விமானங்கள் எண்ணெயையும் வெடி மருந்துகளையும் ஜெர்மனிக்குள் கொண்டு போவதினால் நமக்கு ஏற்பட்டிருக்கும் விமான ஆதிக்கம் டாங்கிப் படைகள் துரிதமாக முன்னேறுவதற்கு சாதகம் அளிக்கும். எதிரிக்கும் யாதொரு அவகாசத்தையும் அளித்து விடாது.

---

# ஜெர்மன் விமானப்படையின் கடைசி அத்யாயம்.

## *ஜெர்மனியின் விமான பலம் மங்கிவிட்டது.*

(விங் கமாண்டர் L. V. பிரேசர்).

ஜெர்மன் பூமியில் பிரிடிஷ் விமானப்படைக்காக அமைக்கப்பட்ட B. 100 விமான தளத்திற்குள் சென்ற டைபூன் விமானம் 24-மணி நேரத்துக்குள் அநேகம் தடவை பறந்து சென்று நூறுவது விமானதளம் என்பதை உறுதிப்படுத்தியது. ரைன் நதியைத்தாண்டு வதில் அவைகள் 208 தடவை பறந்து சென்றன. அவைகளும் நூறுவது விமானதளம் என்ற நாமகரண வைபவத்தைக்கொண்டாடின.

ஜெர்மனிக்குள் நேசதேசப்படை முன்னேறிவரும் நல்ல செய்திகளுடன் கிடைத்து வரும் இந்த சம்பவங்களும் நேசதேச விமான தளங்கள் முக்கியத்வமுள்ளவை என்பதை வற்புறுத்துகின்றன. தோற்றத்தின் மற்றொரு பக்கமும் நமக்கு புலப்படுகிறது. நேசதேசப் படைகள் ஜெர்மனிக்குள் முன்னேறி வரும்பொழுது பலஹீனமடைந்துவரும் ஜெர்மன் விமானப்படைக்கு எவ்வளவு விமான தளங்கள் இருக்கின்றனவென்பதும் கவனிக்கப்பட வேண்டும். ஜெர்மனிக்கு நெருக்கடியான இந்த நாளில் ஜெர்மன் விமானப்படைக்கு நான்கு குறைபாடுகள் இருக்கின்றன. எண்ணெய், விமானங்கள், விமானதளம், நல்ல பயிற்சிபெற்ற விமானப்படை வேலைக்காரர்கள்.

நேசதேசத்தாரின் நீண்டகால வெடிகுண்டு வீச்சிற்கும், லேசான விமானங்களின் டாக்டில் தாக்குதலிற்கும் கிடைத்த லாபங்களான எண்ணெய் குறைவு என்பது ஜெர்மனி யின் விமானப்படை பலஹீனத்திற்கு முக்கிய காரணம். தகுதியான விமானதளங்கள் இல்லா ததும் ஜெர்மன் விமானப்படையின் இகழ்ச்சிக்கு இரண்டாவது காரணம். சமீபகாலத்தில் தரையில் நேசதேசப்படைகள் முன்னேறி வருவதினால் வடக்குப் பகுதியிலுள்ள ஜெர்மன் விமானப்படை ரைன் நதிக்குப் பின்புறம் 50-மைல்களிலுள்ள விமான தளங்களிலிருந்து பின்வாங்கி பிரெமன் பிராந்தியத்திலுள்ள புதிதாக அமைக்கப்பட்ட விமான தளங்களுக்கும் வெஸர் நதிதாண்டி ஹனோவர், பிரன்ஸ்விக்குக்கும் செல்லும்படி நேரிட்டு விட்டது. இந்தப் புதிய தளங்கள் ரைன் நதியிலிருந்து 100, 150-மைல்கள் தாண்டியிருக்கின்றன.

தெற்கில், ஜெனரல் பாட்டனும், பாச்சும் வேகமாக முன்னேறி விட்டதால் பிராங்க் பர்ட் பிரதேசத்திலிருந்த ஜெர்மன் சண்டை விமானங்கள் அங்கிருந்து வெளியேறி எர்பர்டுக் கும், வேமாருக்கும், அதாவது லீப்சிக்குக்குப்போகும் மார்க்கத்தில் பாதிதூரம் வரைக்கும் பின்வாங்கும்படி நேரிட்டது. வடக்கில் வேஸர் நதிக்கு மேற்கில் ஜெர்மன் விமானப்படை நடமாடுவதற்கு யாதொரு விமான தளமும் கிடையாது. தெற்குப் பகுதிகளில் எதிரி வசமுள்ள விமான தளங்கள் ரைன் நதிக்கு சமீபத்திலில்லாமல் ருஷ்ய முனைக்கு சமீபத்தி லிருக்கின்றன. துக்கமான மனப்பான்மையுள்ள ஜெர்மன் விமானப்படை ஆபீஸர்கள் இவ் விதம் நடைபெறுமென்று எதிர் பார்க்கவில்லை.

பிடிபட்ட தேசங்களிலுள்ள தரைகளிலிருந்து புறப்படுவதற்காக ஜெர்மன் விமானப் படை தயாரிக்கப்பட்டது. அவை ஜெர்மன் விமான தளங்களுக்குப் பின்வாங்கவேண்டி

நேரிட்டதால் அந்த தளங்கள் அவைகளுக்குத் தகுதியற்றவையாக இருந்தன. யுத்தத்துக்கு முன்னிருந்த ரகப்படி அமைக்கப்பட்டிருந்ததாலும், காங்கிரீட் ஓடு வழிகளும் இல்லாததினால் அவைகள் பயிற்சிக்கு மட்டும் அமைக்கப்பட்டன. எவ்வளவு துரிதமாக அவைகளைத் திருத்தி அமைத்தாலும் அவைகள் புதிய நடைமுறைக்கு லாயக்கில்லாதவை. ஜெர்மனியில் சிறந்த விமான தளமான ரையின் சில நாட்களுக்குமுன் பிடிபட்டது.

1943-ம் வருஷம் முடிவில் சண்டை விமானங்களை ஏராளமாகக் கட்டுவதில் ஜெர்மனி கவனம்செலுத்தி வந்தது. ஆகிலும் அந்த திட்டம் நிறைவேறாதபடி பிரிட்டனுடையவும் நேசதேசத்தாருடையவும் வெடி விமானங்கள் வெடிகுண்டுகளை வீசி தொழிற்சாலைகளை அழித்து வந்தன. ஏராளமான சண்டை விமானங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இறுதியில் குழல்வாயுவால் ஓடும் விமானங்கள் தலைகாட்டின. வடக்கு, தெற்குப் பகுதிகளில் நேசதேசத்தார்களை குழல் விமானங்கள் தாக்கிவந்தன. அவைகளினால் அதிக விளைவுகள் ஏற்படவில்லை. அதற்கும் விமானதள பிரச்னைதான் காரணம், ஆர் 234 அல்லது M. E. 262 விமானங்களுக்கு 1300 கெஜ நீளமுள்ள ஓடும் வழிகள் தேவைப்படும். 21-வது சேனைப் பகுதியில் தாக்கிவரும் விமானங்கள் புதிதாக அமைக்கப்பட்ட வடக்கிலுள்ள விமான தளங்கிலிருந்து புறப்படமுடியவில்லை. பாட்டனிமுள்ள படைகளைத்தாக்கி வருபவை மிகவும் சொல்பமானதால் அவைகளும் பிரயோஜனமற்றவையாக இருந்தன.

குழல்வாயுவால் ஓடும் விமானத்தில் வெடிகுண்டுகளை அமைக்கும் அரைகளை அமைத்து பைடர் வெடிவிமானங்களாக மாற்றியமைத்து விட்டார்கள். Me 262 விமானம் உத்தம பக்ஷமாக 1,100 ராத்தல் மொத்த எடையுள்ள குண்டுகளை ஏற்றிச்செல்லும் Ar 234 விமானம் 2,200 ராத்தல் மொத்த எடையுள்ள குண்டுகளை ஏற்றிச்செல்லும். ஆகிலும் ஜெர்மனி அதிக பிரயாசைப்பட்டு திருத்தியமைத்த சண்டை விமானங்கள் இரண்டு முதல் 20 ராத்தல் எடையுள்ள ஆளைத்தாக்கும் வெடிகுண்டுகளை ஏற்றிச்சென்றன.

சென்ற சில நாட்களில் நேசதேசப்படைகள் துரிதமாக முன்னேறியதிலிருந்து ஜெர்மன் விமானப்படைக்கு மற்றொரு இடைஞ்சலையும் விளைவித்து விட்டது. திடீரென்று விமான தளங்களைக் காலிசெய்யும்படி நேரிட்டதினால், ஜெர்மானியர்கள் விமான தளங்களிலுள்ள பௌஸர்கள், மற்ற அவசியமான முஸ்தீப்புகளைக் கைவிட்டுச் செல்லவேண்டி இருந்தது. இந்த தளவாடங்களும் மற்ற கைவிடப்பட்ட விமானங்களும் ஏராளமாக முன்னேறும் படைகளின் வசமாகிவிட்டன.

ஜெர்மானியர் பின்வாங்கும்பொழுது அழித்துச் சென்றதினால் கட்டத்தூள்கள் நிறம்பிய ரஸ்தாக்கள் வழியாக நேசதேசப்படைகள் முன்னேறும்பொழுது அவர்களுக்குப்பின் சமீப தூரத்தில் பிரிடிஷ் இஞ்சினியர் பயனியர் படைகளும் விமானப்படையைச் சேர்ந்த கட்டட வேலைப் படைகளும் வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் சீர்கெட்டுப்போன விமான தளங்களை துரிதமாகத் திருத்தியமைக்கவும் அவைகளை லாயக்குள்ளதாகச் செய்யவும் சக்தி பெற்றவர்கள். எதிரிகள் கைவிட்டுச்சென்ற இரண்டு நாட்களுக்குள் B. 100 விமான தளம் திருத்தியமைக்கப்பட்டது. 7 நாட்களுக்குள் அது பூர்த்தியாகி விட்டது. அங்கிருந்த 46 சுரங்க வெடிகள் அகற்றப்பட்டன. ஆயிரம் வேலைக்காரர்கள் அங்கு 2500 டன்கள் எடையுள்ள எஃகுத் தகடுகளை உபயோகித்திருக்கிறார்கள். நார்மண்டி கடற்கரையிலுள்ள B1, B2 தளங்களைப்போல் இது தாத்காலிகமாக அமைக்கப்பட்டதில்லை. இது முதல்தரமான விமான தளம். அங்கிருந்து டைபூன் விமானங்கள் கிளம்பி ஒரே நாளில் பின்வாங்கிச் செல்லும் 300 வாகனங்களைத்தாக்கி நொருக்கி விட்டன.

உலகத்தை ஜெயிக்க முன்வந்த ஜெர்மன் விமானப்படையின் கடைசி அத்யாயம் நெருங்கி விட்டது. மேற்கு முனையில் 1,000 ஜெர்மன் விமானங்கள்தான் நடமாடிக்கொண்டிருக்கின்றன. 2,000-க்கு மேற்பட்ட விமானங்கள் கிழக்கு திக்கில் தற்கொலைக்கொப்பான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன. ஐரோப்பிய யுத்தத்தின் இறுதிகட்டம் வரும்பொழுது ஜெர்மன் விமானப்படையிலுள்ள பாக்கி விமானங்கள் ஒரு மகத்தான இறுதித் தாக்குதலில் மேற்கொள்ளும். ஆனால் அது இந்த நடவடிக்கையை மேற்கொண்டாலும் சரி, அல்லது சும்மாவிருந்து ஒவ்வொன்றாக அழிவுபட்டாலும், நமது வசமானாலும் சரி, ஜெர்மன் விமானப்படை இனிமேல் மாண்ட்காமரியினுடையவும் பாட்டனுடையவும் வெற்றிகரமான தாக்குதல்களுக்கு முற்போக்காக நடவடிக்கை செய்துவரும் நேசதேச விமானப்படைக்கு ஒரு பலமான தீங்கை இழைத்து விடமுடியாது. 1940-ம௵ ஜூன் மாதம்தான் ஜெர்மன் விமானப்படையின் உச்சநிலை யென்றால் 1945-ம௵ ஏப்ரல் மாதம்தான் அதன் அஸ்தமயம் என்பதற்குத் தகுந்த சூசகங்கள் காணப்படுகின்றன.

# ஆர்ஜென்டைனு போர் தொடுத்துவிட்டது.

**W. N. யூயர்.**

(டெயிலி ஹெரால்ட்).

ஆர்ஜென்டைனு குடியரசுநாடு ஜெர்மனி பேரிலும், ஜப்பான் பேரிலும் போர் தொடுத்து விட்டது.

அதனுல் ஒரு விளைவும் ஏற்படாது. ஆகிலும் அதிலிருந்து ராஜீய விளைவுகள் ஏற்படும்.

1944ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் ஜெனரல் பாரால் கிளர்ச்சி செய்தபின் பிரிட்டனுவது அமெரிக்க நிர்வாகமாவது ஆர்ஜென்டைனு நிர்வாகத்தை அங்கீகரிக்கவில்லை. சில அவசியமான காரியங்களுக்காகத் தவிர மற்ற ராஜதந்திர உறவுகள் ஒத்திவைக்கப்பட்டன. ஆர்ஜென்டைனுவும் அமெரிக்க குடியரசு நாடுகளின் சபையிலிருந்து விலக்கப்பட்டிருந்தது. மேலும் அதற்கு பிப்ரவரியில் நடைபெற்ற மெக்ஸிகோ மகாநாட்டில் பிரதிநிதித்துவம் கொடுக்கப் படவில்லை.

அது அச்சுநாடுகளுடன் போர் தொடுத்து அட்லாண்டிக் சாஸனத்தில் கையெழுத்து செய்து மெக்ஸிகோ மகாநாட்டின் முடிவுகளை ஒப்புக்கொண்டால், அதை சமஷ்டியில் சேர்த்துக் கொள்ளலாமென்று அங்கு முடிவு செய்யப்பட்டது.

இந்த யோஜனையை மரியாதையுள்ளதென்றும் கௌரவமானதென்றும் பூனஸ் அயர்ஸ் வரவேற்றது. அதன் பின்தான் ஆர்ஜென்டைனு போர் தொடுத்திருக்கிறது.

பிரிடிஷ், அமெரிக்க நிர்வாகங்கள் பாரலின் நிர்வாகத்தை ஒப்புக் கொள்ளுவது சாவதானமா என்பதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும். இப்பொழுது ராஜதந்திர உறவுகள் மறுபடியும் ஆரம்பிக்கப்படலாமென்று தோன்றுகிறது.

இது சம்பாவிதம் என்பது சென்ற சில மாதங்களாக ஆர்ஜென்டைனுவின் நிர்வாக வைஸ் பிரஸிடெண்ட் பெரானின் செல்வாக்கின்கீழ், உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் புத்திசாலித்தனமான வகையில் மாறுதல்களை மேற்கொண்டிருப்பதிலிருந்து தெரியவருகிறது.

கடைசித் தருணத்தில் சான்பிரான்ஸிஸ்கோவுக்கு ஆர்ஜென்டைனு அழைக்கப்படுமா என்பது மற்றொரு பிரச்னை. ஆனுல் அதற்கு மற்ற அழைப்பு அனுப்பும் வல்லரசுகள் சம்மதப்படவேண்டும்.

---

# ஒகினுவாவுக்குப்பின் தீவுதீவாக தாவுவது முடிந்துவிடும்.

## பஸிபிக் போரின் அடுத்த கட்டம்.

**டெயிலி மெயிலின் மெல்போர்ன் நிருபரான லாசி மாக்டனுல்ட்.**

ஒகினுவாத் தீவை ஆக்கிரமித்ததிலிருந்து பஸிபிக்போரின் ஒரு கட்டம் முடிவடைந்தது, இறுதியான கட்டங்களுக்கு ஆயத்தம் செய்யப்படுமென்பது புலப்படுகிறது. டோக்கியோவுக்குச் செல்லும் பாய்ச்சல் ஸ்தலங்களில் ஒகினுவாதான் கடைசித்தீவு. அடுத்தபடியாக ஜப்பானிலேயே முன்னேறும் வாசல்களை அமைக்கவேண்டும். அங்குதான் ஜப்பானியர்கள் நேசதேசத்தார்களைத் தாக்க சேனைகளை அனுப்பக்கூடும்.

ஒகினுவா பிடிபட்டபின் தீவுத்தீவாகத் தாவிச்செல்லுவது நின்றுவிடும். இப்பொழுது ஜப்பானியர்கள் கடலிலும் ஆகாயத்திலும் முறியடிக்கப்பட்டதாகக் கருதப்படலாம். ஆகிலும் ஜப்பானிய தரைப்படைகளை முறியடித்தாலொழிய ஜப்பானை முறியடித்ததாகக் கருத முடியாது. சைனுவிலும் ஜப்பானிலும் தரைப்போர் மூண்டால்தான் 1942-ம் வருஷத்திற்குப் பின் இப்பொழுதாவது ஜப்பானின் ஐச்வர்யங்களை ஒன்று திரட்டி அவைகளை ஒத்திகை செய்ய அதற்கு சந்தர்ப்பமேற்படும்.

இதுவரையில் டோக்கியோவுக்குப் போகும் நீண்ட மார்க்கத்தில் அமெரிக்கர்கள் படைகளையும் முஸ்தீப்புகளையும் இறக்குமுன் பாலமுனைகளை ஏற்படுத்திவந்தார்கள். நேசதேசத்தார்கள் ஜப்பானைப் படையெடுத்தால் இந்தமுறை சாத்யப்படாது. நமது விமானப்படைகள் ஜப்பானியர்களுக்கு உதவிப்படைகள் வராமல் தாமதப்படுத்தியும் ஜப்பானின் பதில் தாக்குதல்களை முறியடித்தும் செய்துவிடும். ஆகிலும் பஸிபிக்கில் அநேக பிராந்தியங்களில் ஜப்பான் உபயோகித்த படைகளைவிட பலமான தரைப்படைகளை நாம் அங்கு எதிர்த்துப்போராட வேண்டியிருக்கும்.

இவையெல்லாம் நேசதேசத் தலைவர்கள் அறிந்தவைகளே. ஜப்பான் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கியபொழுது இருந்ததைவிட இப்பொழுது ஜப்பானுக்கு அதிக படைபலமிருக்கிறதென்று நேசதேசத்தார்கள் அறிவார்கள். இப்பொழுது 4 மிலியன் ஜப்பானிய ஸோல்ஜர்களிருக்கிறார்கள். அவர்களில் 1,500,000 பேர்கள் முதல்தரமான போர்வீரர்கள்.

மற்றவர்கள் மூலப்படைகளும் சேவைப்படையைச் சேர்ந்தவர்களும். ஆறுமாதங்களுக்கு முன் படையில் சேர்க்கப்படாத 17 முதல் 20 வயது வரையிலுள்ள 1,500,000 வாலிபர்கள் அங்கு இருந்தார்கள். ஒருவருஷத்தில் சேனையில் சேர்க்கப்படும் வயதை 200,000 ஜப்பானியப் பிள்ளைகள் அடைந்துவிடுவார்கள். 1941-ம் வருஷம் முதல் 1944-ம் வருஷம் மத்திவரையில் ஜப்பானுக்கு ஏற்பட்ட படை நஷ்டத்தைவிட இந்த சங்கிலயை அதிகமானது.

ஐவோஜிமாவை இழக்கும்வரையில் எல்லாப் போர்முனைகளிலும் ஜப்பானிடம் 200,000 ஸோல்ஜர்கள்தானிருந்துவந்தார்கள். ஜப்பானியப் படைகளின் பெரும்பாகம் சைனாவிலும் ஜப்பானிலும் இருந்துவருகிறது. நியூபிரிடனிலும், நியூகினியாவிலும், போகன்வில்லியிலும் சுமாராக 80,000 துருப்புகள் அடைபட்டிருக்கின்றன. ஜாவாவில் 30,000-மும், டிரக், போனபி, மற்ற காரொலேன் தீவுகளில் 100,000-மும், பர்மா, தாயிலாந்து, இந்தோசைனா, மலேயாவில் 200,000-மும் இருப்பதாக நம்பப்படுகிறது. கடைசியாகக் கணக்கிட்டதில் சைனாவில் முதல்தரமான 30 ஜப்பானிய டிவிஷன்கள் இருக்கின்றன என்று தெரியவருகிறது. பிலிப்பைன்ஸில் சமாளித்துவருவதும், மற்ற தீவுகளில் துணிக்கப்பட்டிருப்பதுமான படைகளைத்தவிற மற்ற ஜப்பானியப்படைகள் எல்லாம் ஜப்பானைத் தற்காப்புச் செய்யத் தயாராக இருக்கின்றன.

சைனாவிலும், ஜப்பானிலும் படையெடுத்தால் எதிர்ப்பு பலமாக இருக்குமாதலால், நேசதேசத்தாருக்கு முன்பு இருந்ததைவிட இப்பொழுது மிகுதியான படைகளும் தளவாடங்களும் தேவைப்படும். நாம் 250,000 மனிதர்களையும் முஸ்தீப்புகளையும் இறக்கவேண்டுமென்றால் அதற்கு முதலெடுப்பில் 150,000 டன்கள் தேவைப்படும். இந்தச் சிறிய படையை போஷித்துவர ஒவ்வொரு மாதமும் 400,000 டன்கள் சர்ப்பராக்கள் தேவைப்படும். இவையெல்லாம் புதிதாக அமைக்கப்பட்ட துறைமுகங்களில் எதிரியின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இறக்கப்படவேண்டும். அந்த துறைமுகங்கள் ஸிட்னியிலிருந்து 4,300 மைல்கள் தாண்டியும், சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து 4,500 மைல்கள் தாண்டியும் ஹானலூலுவிலிருந்து 3,300 மைல்கள் தாண்டியும் இருக்கின்றன.

ஜெர்மனி வெகு சீக்கிரத்தில் வீழ்ச்சிபெறும். ஓகினாவா கைவசமாகிவிட்டதென்று அமெரிக்கர்கள் சொல்லலாம். ஆகிலும் அடுத்து இரண்டுவாரங்களுக்குள் ஜப்பானியப் போர் முடிந்துவிடுமென்றும் நினைப்பதற்கில்லை. ஐரோப்பாவைப் படையெடுப்பதற்கு ஆறுமாதத்துக்குமுன் பிரிடன் சுறுசுறுப்புடன் இருந்ததுபோல அடுத்துவரும் ஆறுமாதங்களில் பஸிபிக்கில் சுறுசுறுப்பு காணப்படும்.

---

# ஜப்பானிலிருந்து ஷாங்கேக்குச் செல்லும் மார்க்கம்.

## பஸிபிக் கடற்படையினிடமிருந்து அபாயம்.

**(டேயிலி டெலகிராபின் கடற்படை நிருபரான கமாண்டர் கென்னத் எட்வர்ட்ஸ்).**

கடற்தளபதி ஸர் ப்ரூஸ் பிரேசரிடமுள்ள பிரிடிஷ் பஸிபிக் கடற்படை முதல் முதலாக பஸிபிக்கில் ஜப்பானியர்களை எதிர்பார்த்ததற்கு மேலாக ஜப்பானுக்கருகிலேயே தாக்கியிருக்கின்றன.

பிரிடிஷ், ஆஸ்திரேலிய, கனடிய கடற்படையைச் சேர்ந்த சிறிய கப்பல்கள் பஸிபிக்கிலுள்ள அமெரிக்கக் கடற்படையுடன் ஒத்துழைத்து வந்திருக்கின்றன. இப்பொழுது பிரிடிஷ், கடற்படை ஜப்பானுக்கு சமீபத்திலுள்ள தீவுகளிலிருந்து 200 மைல்களுக்கு அப்பாலிலேயே தாக்கியிருக்கிறது. அதன் லக்ஷியம் ரெயூக்யூஸ் தீவுகள்.

இந்தத் தீவுக்கோர்வைகள் ஜப்பானிலிருந்து தென்மேற்கு முகமாக பார்மோசாத் தீவுக்குச் செல்லுகின்றன. அவைகளில் ஷாங்கேயிக்குச் செல்லும் முக்கியமான கடல் மார்க்கத்தைக் காப்பாற்றுவதற்கான உள்வளைய தளங்கள் இருக்கின்றன. வட மேற்குப் பக்கத்தில் போரை நடத்துவதற்கு பிரிடிஷ் கடற்படைக்கு எண்ணெய்க் கப்பல்களும் சாமான் கப்பல்களும் உதவியளித்திருக்கவேண்டும்.

பிரிடிஷ் கடற்படை வட மேற்கு முகமாகச் சென்றுவிட்டதிலிருந்து சிங்கப்பூர் பிராந்தியத்தில் இது வரையிலிருந்து வந்த ஜப்பானியக் கடற்படையின் கதி என்ன ஆகுமென்று

நாம் யோசிக்கவேண்டும். அவைகள் இன்னும் அங்கே நிலைத்திருப்பதாக வைத்துக் கொண்டால், அவைகள் நமது விலாப்பக்கத்திலிருப்பதினால் அவைகளை நாம் சும்மா விட்டிருக்கமாட்டோம். ஆகையால் பின்கண்டவைகளில் ஒன்று சம்பவித்திருக்கவேண்டும்.

(1) இந்தக் கடற்படை ஜப்பானுக்குப் பின்வாங்கியிருக்கவேண்டும்.

(2) பிலிப்பைன்ஸ் போரில் ஏற்பட்ட நஷ்டங்களை ஜப்பான் ஈடு செய்ய முடியாமல் இருந்திருக்கும்.

(3) ரியர் கடற்தளபதி வியான் சுமாத்ராவிலுள்ள பாலம்பாங்க் எண்ணெயை சுத்தி செய்யும் சாலைகளைத் தாக்கியபின் விரிவான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜப்பானுக்குப் போதுமான எண்ணெய் வசதி கிடையாது.

(4) பிலிப்பைன்ஸ் பிராந்தியத்தில் மற்றொரு பிரிடிஷ், அல்லது அமெரிக்கப் படை தெற்கிலுள்ள ஜப்பானியப் படைகளைத் தாக்கத் தயாராக இருக்கும். சமீப காலத்தில் பிரிடிஷ் கடற்படையைப்பற்றி வெளி வந்திருக்கும் விஷமமான செய்திகளுக்குப்பின் உதவி கடற் தளபதி ராலிங்க்ஸுடைய கடற்படை கடற்தளபதி ஸ்புருவன்ஸின் ஐந்தாம் படையுடன் மிகவும் வெற்றிகரமாக ஒத்துழைத்ததென்பதை நாம் வரவேற்கிறோம்.

---

# பஸிபிக் கடற்படை ரெயூகியூஸைத் தாக்குகிறது.

## நடவடிக்கையின் முதல் கட்டம்.

### பீடர் பர்கெட்.

**(கிங் ஜார்ஜ் V கப்பலிலுள்ள டெயிலி எக்ஸ்பிரஸின் நிருபர்).**

ஜப்பானிய சாம்ராஜ்யத் தீவுகளை முதல் முதலில் தாக்கிய யுத்தக்கப்பல்கள், விமானந் தாங்கிகள் கொண்ட பிரிடிஷ் பஸிபிக் கடற்படையின் போர்ப்படை கமாண்டரான உதவி அட்மிரல் ஸர் H. பெர்னார்ட்ராலிங்க்ஸ், கிங்க் ஜார்ஜ் V என்ற கப்பலில் சென்றார். ஜப்பானுடன் பிரிடிஷ் கடற்படைப் போரைத் துவக்குமுன் அவர் கடற்படைக்கு ஒரு சொற் பொழிவு ஆற்றினார்.

"ஜெர்மன் பருந்துப்பாய்ச்சல் வெடிவிமானங்களை முறியடிக்க அது தைரியம் கொண்டது. ஜப்பானுடைய முறைகளை சமாளிக்கவும் தைரியம் வேண்டும். நீங்கள் எவ்விதம் பீதியடைந் திருந்தாலும் உங்களுடைய லக்ஷியத்தை மறந்துவிடக்கூடாது. தைரியமென்பது உனக்கு மிகுதியான பயம் உண்டாயிருக்கும்பொழுதும் லக்ஷியத்தை மறந்துவிடாமலிருப்பது.

"பிரிடனுடையவும் அமெரிக்காவினுடையவும் ராணுவ அதிகாரிகளிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நாம் இங்கு வந்திருக்கிறோம். கடற் தளபதியான நிமிட்ஸும், ஸ்ப்ருவன்ஸும், மிட்ஷரும் நம்மை வரவேற்கிறார்கள்." அதன் பின் நாங்கள் புறப்பட்டு பார்மோசாவிலிருந்து ஜப்பானுக்கு சங்கிலிக்கோர்வை போலுள்ள ரெயூகியூஸ் தீவுக்கூட் டத்தைச் சேர்ந்த சாகிஷிமாத் தீவுகளின் பேரில் குண்டுகளைப் பிரயோகித்தோம். பிரிடிஷ் விமானங்கள் தரையிலிருந்த 20 ஜப்பானிய விமானங்களை அழித்தன. ஒரு கடற்கரை ஓரமாகச் செல்லும் கப்பலை மூழ்கடித்தன, மற்றும் சில கப்பல்களைப் பழுதுபடுத்தின. ஓமாஸி நகரத் துக்குத் தீ மூட்டிவிட்டன.

கடற் தளபதி ராலிங்க்ஸ் எதிரியையும் அவனுடைய தந்திரங்களையும் நன்கு அறிவான். அவன் டோகியோவின் மூன்று வருஷ காலம் கடற்படை தூதராக இருந்திருக்கிறான்.

பசிபிக்கில் ஜப்பானியர்களை இப்பொழுது நாம் தாக்கியது, நாம் ஆரம்பிக்கப்போகும் நீண்டகால நடவடிக்கைக்கு முதல் கட்டமாகும். இப்பொழுது இருக்கும் கடற்படை வரப்போகும் படைகளின் ஒரு அம்சம்தான். கடற்படைகள் விமான உதவியன்னியில் சென்று ஜப்பானியரால் மூழ்கடிக்கப்பட்ட பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிபல்ஸ் என்ற கப்பல் களுக்குப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று ஆபீஸர்களும் மாலுமிகளும் ஆவலுடனிருக் கிறார்கள்.

இந்தக்கப்பலைச் சுற்றி நிற்கும் விமானந் தாங்கிகளில் மலேயாவைத் தற்காப்புச் செய்ய இருந்ததைவிட ஏராளமான விமானங்கள் இருந்து வருகின்றன. இந்த யுத்தக் கப்பல்

14 4 436

களிலுள்ள விமான எதிர்ப்பு பீரங்கிகள் பஸிபிக் போரின் ஆரம்பகாலத்தில் சொல்பமாக இருந்தன. இல்லஸ்ட்ரியஸ் உள்பட விமானந்தாங்கிகள் மற்ருெரு போர் வீரரான உதவி அட்மிரல் ஸர் பிலிப் விமானியின் அதிகாரத்துக்குட்பட்டவை.

இந்த கமாண்டர் கப்பல் தாக்கச் செல்லுமுன், என்னை அந்தக் கப்பலுக்குக் கொண்டு போன அமெரிக்க படகோட்டிகள் பிரிடிஷ் மாலுமிகளைப்பற்றி என்னிடம் சொன்ஞர்கள். அது பின்வருமாறு "பிரிடிஷ் கடற்படையும் மாலுமிகளும் அமெரிக்கர்களை விட வேறுபட்டவர்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டிருக்கிரும் .நாங்கள் பிரிடிஷ் மாலுமிகளை சந்தித்து சம்பாஷணை செய்தபொழுது அவர்கள் எங்களைப் போன்றவர்களென்று தான் கண்டோம். ஒரே காரணத்துடன் ஒரே விதமான வேலையைச் செய்கிறவர்கள் ஒரே மாதிரியாகத்தான் இருப்பார்கள். ஆகிலும் அவர்கள் இங்கு வந்திருக்கிருர்களென்பதைக் கண்டு நாங்கள் சந்தோஷம் அடைகிரும்".

---

# ஜப்பானைத் தாக்கும் தருணத்தை துரிதப்படுத்துவது.

## நேசநேச நீர்மூழ்கிகளின் சேவை.

### ரியர் கடற்தளபதி H. G. தர்ஸ்பீல்ட்.

பஸிபிக்கிலும் கிழக்கு இந்திஸ் தீவுகளிலுள்ள பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த நீர்மூழ்கிகளின் அரிய செய்கைகளைப்பற்றி சமீபகாலத்தில் வெளியிடப்பட்ட உத்தியோக அறிக்கையிலிருந்து 74 ஜப்பானியக் கப்பல்கள் அழிக்கப்பட்டனவென்றும் மற்றும் 25 விமானங்களும் பழுதுபட்டனவென்றும் தெரியவருகிறது. இந்த ரிபோர்ட்டுகள் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட வாரச்செய்திகளை வெளியிடுகின்றன. இவ்விதம் செய்வதற்கு எதிரிக்கு உபயோகமுள்ளத் தகவல்கள் தெரியக்கூடாதென்பதும் எதிரியினல் தாக்குதல் ஏற்படக்கூடாதென்பதும்தான் காரணங்களாகும்.

மூழ்கடிக்கப்பட்ட ஜப்பானியக் கப்பல்களின் பெரும்பாகம் சிறியவைகள். ஏனெனில் பிரிடிஷ், அமெரிக்க நீர்மூழ்கிகளின் நடவடிக்கையினல் எதிரியின் கடற்படைபலம் குறைந்துவிட்டபடியால், எதிரி அவனிடமுள்ள பாக்கிப் பெரிய கப்பல்களைக் கூடுமானவரையில் அபாயத்துக்குட்படுத்துவதில்லை. மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களில் ஒரு சிறிய எண்ணெய்க் கப்பலும், (எதிரிக்குவரும் எண்ணெய் ஸப்ளை கடல்தாண்டியுள்ள நாடுகளிலிருந்து வருவதால் இந்த ரகம் எதிரிக்கு மிகவும் முக்கியத்வமுள்ளது). ஒரு சுரங்க வெடிபாவும் கப்பலும், கவசம்பூண்ட இழுப்புக் கப்பலும், நீர்மூழ்கியைத் தாக்கும்இழுப்புக் கப்பலும் சேர்ந்தவை. மற்றவைகள் சிறிய கலங்கள். (ஜப்பானியர்கள் ஏராளமான மரக்கலங்களை சென்ற ஒன்று இரண்டு வருஷங்களாக உபயோகித்து வருகிருர்கள்.) படைகளை இறக்கும் படகுகள், கடற்கரையோரமாகச் செல்லும் கப்பல்கள், தாஞகச்செல்லும் லேசான கப்பல்கள்

இந்த லாபங்கள் போருக்குப்பின்தான் கிடைத்தன. ஏனென்ருல் பத்திரத்திற்காக நீர்மூழ்கிகள் தண்ணீருக்குள் மூழ்கிக்கிடந்தால் அவைகளிலுள்ள மீன் வெடிகள் இவ்வளவு நஷ்டத்தை விளைவித்திருக்கமுடியாது. அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஒரு பிரிடிஷ் நீர்மூழ்கி சமுத்திரமட்டத்தில், மலாக்கா ஜலசந்திக்குப் போகும் வழியில் சுமாத்ராவின் வடகிழக்குக் கடற்கரைக்கு அப்பாலில், கவசம்பூண்ட இழுப்புக் கப்பல் துணையுடன் சென்ற ஐந்து கடற்கரையோரமாகச் செல்லும், கப்பல்களைக் கொண்ட கப்பற் கூட்டத்தைத் தாக்கிற்று. இந்த நடவடிக்கையில் அது எதிரித் துணைக்காவல் கப்பலின் சக்திவாய்ந்த கவசத்துடன் பீரங்கிப் போரை நடத்தவேண்டியிருந்தது.

இந்தப் போரில் எதிரியின் கவசம்பூண்ட இழுப்புக் கப்பலும், கடற்கரையோரமாகச் செல்லும் கப்பல்களில் ஒன்றும் மூழ்கடிக்கப்பட்டன. மற்ற நான்கு கப்பல்களும் தப்பித்துக் கொள்ள கடற்கரைக்குச் சென்றுவிட்டன. அவைகளிலிருந்தவர்கள் தப்பி ஓடியிருக்கலாம். ஆனல் இரண்டு கப்பல்கள் கரைசேரவில்லை. அவைகள் தீப்பற்றி எறிந்தன.

இதே பிராந்தியத்தில்தான் எண்ணெய்க் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. அதுவும் பீரங்கிகளின் குண்டுவீச்சுக்குட்பட்டு தீப்பற்றி எறிந்தது. சுரங்க வெடிகளைப்பாவும் கப்பல் சுமாத்ராவுக்கு மேற்குக்கரையிலுள்ள பாடாங்குக்கருகில் அழிக்கப்பட்டது. அது இரண்டு நீர்மூழ்கிகளைத் தாக்கும் கப்பல்களுடன் சென்றபொழுது நீர்மூழ்கியின் வெடியைப்போட்

டது. அதில் ஏராளமான இருந்த சுரங்க வெடிகளை அது பாவும் தருவாயிலிருந்தது. ஏனென்றால் மீன்வெடி அதைத் தாக்கியவுடன் அது வெடித்து சுக்குத் தூளாக ஆகி மறைந்து விட்டது.

கடற்படை உதவிக் கப்பல் பீரங்கிக்குண்டுகளால் மலாக்கா ஜலசந்தியில் மலேயாவிலுள்ள டெர்னுமா நதியின் முகத்வாரத்துக்கருகில் மூழ்கடிக்கப்பட்டது. கடலில் கிடைத்த லாபங்களைத் தவிர நீர்மூழ்கிகள், சுமாத்ராவின் மேற்குக் கடற்கரையிலுள்ள பூலோபாடேஜர் என்னும் கடற்கரையிலுள்ள எதிரி அமைப்புகளின் பேரிலும், இந்துமகா சமுத்திரத்திலுள்ள சுமாத்ராவுக்கு வடமேற்கில் உள்ள நிகோபார் தீவுகளின் பேரிலும் பீரங்கிப் பிரயோகம் செய்திருக்கின்றன.

பர்மாவிலுள்ள ஜப்பானியப்படைகளுக்கு சர்ப்பரா மார்க்கங்களைத் தாக்கும் இந்த நடவடிக்கைகள் அங்குள்ள நேசதேசப் படைகளுக்கு மிகவும் உபயோகமுள்ளவை. மாண்டலேயைத் திரும்பிப் பிடித்ததற்கு அவைகள் முக்கியமான பங்கெடுத்துக்கொண்டன. வாஷிங்டனிலுள்ள பிரிடிஷ் கடற்படை பிரிதிநிதியாகவும் கிழக்குக் கடற்படையின் மாஜி தளகர்த்தரான கடற்தளபதி ஸர் ஜேம்ஸ் ஸோமர்வில் சமீபகாலத்தில் ஒலிபெருக்கியதுபோல இந்துமகா சமுத்திரத்திலும் மலாக்கா ஜலசந்தியிலும் பிரிடிஷ் கடற்படை சுதந்திரத்துடன் நடமாடுவதிலிருந்து மலாக்கா ஜலசந்தி மறுபடியும் பிரிடிஷாரின் பூரா ஆதிக்கத்துக்கு வந்துவிடுமென்றும், பிரிடிஷ் கொடி சிங்கப்பூரில் மறுபடியும் பறக்குமென்றும் தோன்றுகிறது.

இது நிறைவேறிவிட்டால் ஜப்பானைச் சுற்றியுள்ள பிராந்தியத்தில் நடமாடிவரும் அமெரிக்க கடற்படைக்கு மிகுந்த சாதகமாக இருக்கும். ஏனெனில் அதற்குத் தேவையான எண்ணெயை பஸிபிக் கடல்தாண்டி 90,000 மைல்கள் கொண்டுவருவதைவிட 4,000 மைல்கள் தாண்டியுள்ள பாரஸிக வளைகுடாவிலிருந்தே பெற்றுவிடும்.

ஜப்பானுடன் இறுதியில் போரைநடத்த ஈடுபட்டிருக்கும் பிரிடிஷ் பஸிபிக் கடற்படை உள்பட நேசதேச கடற்படைக்குத் தேவையான எண்ணெயைக் கொண்டுவரும் கப்பல்களின் பாதி அளவு குறைந்துவிடும். பர்மாவையும் டச்சு கிழக்கிந்திஸ் தீவுகளையும் நாம் பிடித்துவிட்டால் எண்ணெய் வரும் தூரம் இன்னும் குறைந்துவிடும். பஸிபிக் போன்ற கடல் போரில் கடற்படையின் பலம்தான் முக்கியமான அம்சமானதால், எண்ணெய் மிகவும் முக்கியத்வமுள்ளது.

---

## பர்மாவில் விமான நடவடிக்கை.

### நேசதேச வெற்றிக்கு மிகவும் முக்கியமான அம்சம்.

பர்மாப் போரில் நமக்கு சௌகரியமான நிலைமை ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் உண்டு—சிலாக்கியமான பயிற்சி, படைகளுக்கு உயர்வான முஸ்தீப்புகள், பர்மாப் போரில் சிலாக்கியமான அனுபவம். ஆகிலும் ஆகாய ஆதிக்கத்தில் ஏற்பட்ட மாறுதலும் விமானப் படையை நாம் உபயோகித்த முறையும் தான் நமக்கு சௌகரியமான நிலைமை ஏற்பட்டதற்கு முக்கியமான காரணம்.

ஒரு சமயத்தில் கல்கத்தா பேரிலும் தெற்கிலிருந்து வரும் மற்றப் படைகள் பேரிலும் தாக்குதல் ஏற்படும் போலிருந்தது. ஆகிலும் சிலாக்கியமான விமானங்கள் ஏராளமாக வந்துவிட்டதினால் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டது. நாம் சாவதானமாக முன்னேற்றம் அடைந்தோம். இப்பொழுது நாம் பர்மா பூராவிலும் தாய்லாந்திலும் ஆகாய ஆதிக்கம் பெற்றுவிட்டோம். எதிர்ப்பு அபூர்வமாகத் தான் காணப்படுகிறது. நாம் தினசரி 200 தடவை பாய்ந்து சென்று தாக்கும்பொழுது ஜப்பானியர்கள் இரவில் சிறிதளவு தான் தாக்குகிறார்கள். சில பைடர் பாம்பர்கள் விமான தளங்களைப் பகலில் தாக்குகின்றன.

பர்மா யுத்தம் போக்குவரத்துகளுக்கான யுத்தம் தான். ஜப்பானியர்கள் முக்கியமாக இருப்புப்பாதை, தண்ணீர், ரஸ்தாக்களைத் தான் போக்கு வரத்துக்கு நம்பியிருக்கிறார்கள்.

அவர்கள் விமானப் படையை நம்பியிருக்கவில்லை. அவர்கள் இப்பொழுது பெரிய கப்பல்களை உபயோகிக்க முடியவில்லை, மேலும் ஜப்பானிய சர்ப்பராக்களை நாம் விமானப்படை மூலம் தாக்கி வருகிறோம். தாக்குதல் பின்வருமாறு நடைபெறுகிறது.

(1) சைனாவிலுள்ள அமெரிக்க விமானங்கள் பார்மோஸாக் கால்வாயிலும் தெற்கு நோக்கியும் செல்லும் கப்பல்களைத் தாக்குகின்றன.

(2) சிங்கப்பூரிலிருந்து குவாலாலம்பூர் வரையில் அமெரிக்க ஸ்டாடஜிக் விமானங்களும், சூபர்பறக்கும் கோட்டைகளும்.

(3) பிரிடிஷ், அமெரிக்க கனமான வெடி விமானங்கள் பாங்காக்—ஸியாம்—இருப்புப் பாதையைத் தாக்குகின்றன.

(4) பிரிடிஷ் விமானப் படை சுமாத்ராவுக்கு அப்பாலிலுள்ள சமுத்திரத்தில் சுறங்க வெடிகளைப் பாவுகிறது.

(5) அமெரிக்க லிபரேடர் விமானங்கள் டென்னாசரிடம் கடற்கரைக் கருகிலுள்ள கப்பல்களைத் தாக்குகின்றன.

(6) மத்திய பர்மாவிலுள்ள பிரிடிஷ் போபைடர்களும், மஸ்கிடோ விமானங்களும், மஸ்டங்குகளும்; ரஸ்தா இருப்புப்பாதை, நதிப் போக்குவத்துகளைத் தாக்குகின்றன.

(7) பிரிடிஷ் சண்டை வெடி விமானங்கள் சர்ப்பராக் குவியல்களைத் தாக்கி வருகின்றன.

பிரிடிஷ் விமானப்படையில் பிரிடிஷ் கனுடிய, இந்தியப்படைகளும் சேர்ந்திருக்கின்றன.

இவ்விதமாக நாம் ஜப்பானியப் போக்குவரத்துகளை பல இடங்களில் துணித்து வருகிறோம். ஆகிலும் ஜப்பானியர்கள் கெடுதல்களை வெகு சீக்கிரத்தில் பழுது பார்த்துவிடக் கூடியவர்களாதலால் நம்முடைய தாக்குதல் தளர்ச்சி பெருமல் நடைபெறவேண்டும். ஆகிலும் நமது வசமாகும் ஜப்பானியர்கள் இளைத்துப் போய் நோய்வாய்ப்பட்டிருப்பதினாலும், ஜப்பானின் தாக்குதல்கள் முறியடிக்கப்படுவதினாலும், நமது தாக்குதலின் பயன்கள் நமக்குப் புலப்படுகின்றன.

நம்முடைய சர்ப்பரா நிலமை சம்பந்தப்பட்ட மட்டில் நமது போக்குவரத்து மார்க்கங்கள் பேரில் நமக்கு விமான ஆதிக்கம் இருந்திருந்தால் என்ன நேரிட்டிருக்கும் என்று நினைப்பது அவசியமில்லை. நமது முன்னேற்றத்திற்கு ஆகாய ஆதிக்கம் தான் அவசியமாக இருந்தது. 1944-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் அரகானில் ஆருவது இந்திய டிவிஷன் துணிக்கப்பட்ட பொழுது படைகள் சுதந்திரம் பெறும்வரையில் சாமான்கள் விமான மூலம் அனுப்பப்பட்டன. சுதந்திரம் பெற்ற பின் அந்தப் படையும் மற்ற இந்திய டிவிஷன்களும் ஜப்பானியர்களை துரத்தியடித்தார்கள் 7000 ஜப்பானியர்கள் கொல்லப்பட்டார்கள்.

சில வாரங்களுக்குப் பின் விங்கேட்டின் படையெடுப்பு விமான மூலம் நடைபெற்றது; சர்ப்பராக்களும் அநேக மாதங்கள் வரையில் விமான மூலம் அனுப்பப்பட்டன. அதே சமயத்தில் இம்பாலிலும் கொஹிமாவிலும் அடைபட்டிருந்த படைகள் அநேக வாரங்கள் வரையில் விமான மூலம் ஸப்ளைகளைப் பெற்று முற்றுகையை சமாளித்து நின்றன. பிரிடிஷ் இரண்டாவது படையும் அதன முஸ்தீப்புகளும் விமான மூலம் உதவிக்குக் கொண்டு போகப்பட்டன. ஜப்பானுக்கு வரும் ஸப்ளை மார்க்கங்களை நமது விமானங்கள் நொருக்கிவிட்டன. நமது விமானங்கள் நமது துருப்புகளுக்கு உணவுப் பொருள்களையும், எண்ணெயையும், வெடி மருந்துகளையும், தண்ணீரையும் கொண்டு போவதையும் ஜப்பானியர்கள் கண்ணுற்ருர்கள்.

பர்மாவில் விமானப் போக்குவரத்து மிகவும் முக்கியமான அம்சம். இந்த சக்தியை நமக்கு இஷ்டமான இடத்திற்குக் கொண்டு போகலாம். நமது தரைப்படை கமாண்டர்கள் போக்குவரத்து மார்க்கங்களை நம்பாமல் தங்கு தடையன்னியில் போர் புரியவும் சலனம் செய்யவும் சக்தி பெற்றிருக்கிருர்கள்.

எதிரியின் கடற்கரையில் நமக்கு இஷ்டமான இடங்களின் படைகளை இறக்க நாம் கடற்படையை எப்பொழுதும் உபயோகித்து வந்தோம். நமது விமான ஆதிக்கமும் விமானப்

போக்குவரத்து அமைப்பும் இந்த முறையை தேசம் பூராவிலும் உபயோகிக்கக் கூடியதாக இருக்கிறது. போர்முனையிலுள்ள எந்த கமாண்டருக்கும் இவ்விதமான அற்புதமான உதவி கிடைத்ததில்லை.

14-வது சேனைத் தலைவரான ஜெனரல் ஸ்லிம் 50 மைல்கள் முன்னேறுவதென்று முடிவு செய்தானென்றால், லக்ஷியத்தை அடைந்த உடன் அவனுக்கு டாகோட்டா விமானங்கள் ஆகாய மூலம் சர்ப்பராக்களைக் கொண்டுவரும் என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியும். அவனுடைய போக்குவரத்து மார்க்கங்கள் ஆகாய வீதியில் அமைக்கப்பட்டிருந்தன. நேச தேச விமானங்கள் 1944-ம் வருஷத்தில் செய்த சேவைக்குப் புள்ளி விபரங்கள் பின் வருமாறு. பறந்து சென்ற மொத்த மணிகள் 3,00,000, மொத்தமாக பறந்து சென்ற தடவை 90,000. போர்முனைக்குக் கொண்டு போகப்பட்ட சாமான்கள் 2,50,000 டன்கள். காயம்பட்டவர்களை அப்புறப்படுத்தியது 60,000. இன்று நாம் ஒவ்வொரு நாளும் 1,200 தடவை சாமான்களை ஏற்றிக்கொண்டு செல்லுகிறோம்.

இந்த நடவடிக்கைகளெல்லாம் சேனையின் சேவையைக் குறைவுபடுத்திவிட முடியாது. ஆகிலும் விமான ஆதிக்கத்தின் முக்கியத்வத்தை நாம் புறக்கணித்துவிட முடியாது. அது இல்லாவிடில் தரைப்போர்கள் சிறப்பாக நடைபெற்றிருக்க முடியாது.

---

## உலக பத்திர ஸ்தாபனம்.

### மத்திய வல்லரசுகளின் உரிமைகள்.

**மாஞ்செஸ்டர் கார்டியனின் ராஜதந்திர நிருபர்.**

லண்டனில் சாம்ராஜ்ய நாடுகளின் சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டைப்பற்றிய முடிவுகள் உச்சநிலையை அடைந்து வருகின்றன. சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்கு சாம்ராஜ்யநாடுகளின் முனையைத் தயாரிப்பதாக உத்தேசமில்லை. சாம்ராஜ்ய நாடுகளின் உத்சாகத்தை பலப்படுத்த முயற்சி செய்யப்படும்.

புதிய உலக ஸ்தாபன அமைப்பு சம்பந்தமான பிரச்னைகளில் முக்கியமாக கனடா சொல்லும் வாதங்களும் கவனிக்கப்படவேண்டும். உண்மையில் சிறிய வல்லரசுகளாக இருப்பவர்களுக்கும் அதிகமான ராணுவ பொருளாதார பொறுப்புகளை வகித்து வருகிறவர்களுக்கும் வித்யாசம் காட்டப்படவேண்டுமென்று கனடா வற்புறுத்துகிறது. இதை அனுசரித்து கனடா "மத்திய வல்லரசு" என்று சொல்லிக்கொண்டு, உலகபத்திர கௌன்ஸிலில் நிரந்தரமாக இல்லாத இடங்களுக்கு நடைபெறும் தேருதலில் மத்திய வல்லரசுகளுக்கும் முகான்மை அளிக்கப்படவேண்டுமென்றும் பாத்தியம் கொண்டாடுகிறது.

"மத்திய வல்லரசுகள்" என்ற வகுப்பு உத்தியோக முறையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் தானகவே ஜன ரஞ்சகமாகும்படி அதிலிருந்து உத்தியோக முறையிலும், உத்தியோகப் பற்றற்ற முறையிலும் போதுமான அக்கரைகள் உண்டாகிவிட்டன. ஆஸ்திரேலியாவும் இந்த வகுப்பில் சேர்ந்துவிட்டது. போலந்தும், ஹாலந்தும் இந்த வகுப்பில் சேர்ந்துகொள்ளத் தகுதியுள்ளவைகள் என்று சொல்லப்படுகிறது. தங்களுடைய பாத்தியங்களைக் கொண்டாடத் தயங்கிநிற்கும் தேசங்கள் பெரிய வல்லரசுகளின் ஆதரவை நாடுகின்றன.

உலகபத்திர சபையில் பிரதிநிதித்வமில்லாத எந்த வல்லரசும் அதின் முடிவை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படும் என்று டம்பார்டன் ஓக்ஸில் முடிவு செய்யப்பட்டதையும் கனடா ஆக்ஷேபிக்கிறது. கனடாவுக்கு பிரதிநிதித்வமில்லாதபொழுது ராணுவ நடவடிக்கை சம்பந்தமான முடிவை அமுலுக்குக் கொண்டுவர கனடா சம்மதிக்காது.

இந்த பிரச்னையைத் தீர்க்க தேசங்களுக்குள் ஆலோசனை இருக்கவேண்டுமென்று லண்டனில் விவாதிக்கப்படலாம். ஆகிலும் அதற்கு பரிகாரம் சுலபமானதல்ல. ஏனெனில் உபரியாக ஒரு ஆலோசனை சபையை அமைத்தால், சர்வதேச சங்கத்தை உபயோகமற்றதாக செய்வதற்குக் காரணங்களாக இருந்த சந்தேகங்களும், தாமதங்களும் தோன்றிவிடக்கூடும்.

புதிய உலக ஸ்தாபன அமைப்புக்கான சாதனங்கள் சம்பந்தமான பிரச்னைகளைப்பற்றி பிரிடன் சாம்ராஜ்ய பிரதிநிதிகளுக்கு எடுத்துச் சொல்லும். அந்த ஸ்தாபனம் எங்கு அமைக்கப் படும், அதன் அமைப்புகள் ஒரே இடத்திலிருக்குமா அல்லது உலகம் பூராவிலும் பற்றி யிருக்குமா என்ற விஷயங்கள் சர்ச்சை செய்யப்படும். பழைய சர்வதேச சங்கத்தை அகற்றி விட்டு புதிய ஸ்தாபனத்தை அமைப்பதற்காக விவரங்களும் ஆலோசிக்கப்படும். அது சம் பந்தமாக உத்திரவுகளைப்பற்றிய விவாதமும் நடைபெறும். அவைகளை ரத்து செய்துவிட்டு வேறு உருவத்தில் அவைகளை அமைப்பதா அல்லது அதற்கு பதிலாக புதிதாக ஜவாப்தாரித்வமுள்ள திட்டத்தை ஏற்படுத்துவதா என்ற விஷயங்களும் சர்ச்சை செய்யப்படும்.

**பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.**

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 245 (1-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21- 4-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 25- 4-45 | அண்டக்குளம் | ... மாலை 7.00 |
| 22- 4-45 | கீரப்பழனி | ... ,, 7.00 | | ,, | கிள்ளனூர் | ... ,, 7.30 |
| ,, | ஆலூர் | ... ,, 7.30 | | 26- 4-45 | பள்ளிவாசல் | ... ,, 7.00 |
| 23- 4-45 | புத்தாம்பூர் | ... ,, 7.00 | | ,, | பில்லமங்கலம் | ... ,, 7.30 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, 7.30 | | 27- 4-45 | நச்சாந்துபட்டி | ... ,, 7.00 |
| 24- 4-45 | வடவாளம் | ... ,, 7.00 | | ,, | விராச்சிலை | ... ,, 7.30 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, 7.30 | | | | |

### பிரஸங்கம் 246 (2-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28- 4-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 2- 5-45 | அன்னவாசல் | ... மாலை 7.00 |
| 29- 4-45 | ஆலங்குடி | ... ,, 7.00 | | ,, | கீழக்குறிச்சி | ... ,, 7.30 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, 7.30 | | 3- 5-45 | நல்லூர் | ... ,, 7.00 |
| 30- 4-45 | திருமெய்யம் | ... ,, 7.00 | | ,, | மாத்தூர் | ... ,, 7.30 |
| ,, | மேலூர் | ... ,, 7.30 | | 4- 5-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, 7.00 |
| 1- 5-45 | புலியூர் | ... ,, 7.00 | | ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, 7.30 |
| ,, | கண்ணங்குடி | ... ,, 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 21— 4—45 | வெட்டம்விடுதி. | 28— 4—45 | வெட்டம்விடுதி. |
| 22— 4—45 | மருதன்கோன்விடுதி. | 29— 4—45 | மருதன்கோன்விடுதி. |
| 24— 4—45 | ராமச்சந்திரபுரம். | 1— 5—45 | ராமச்சந்திரபுரம். |
| 26— 4—45 | குழிபிறை. | 2— 5—45 | கரம்பக்குடி. |
| 28— 4—45 | புதுக்கோட்டை. | 3— 5—45 | வடகாடு. |
| | | 4— 5—45 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—23-4-45.